கிருஷ்ணர் சூரியனைப் போன்றவர். மாயை இருளைப் போன்றது. கிருஷ்ணர் இருக்கும் இடத்தில் மாயைக்கு இடமில்லை.

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை அக்டோபர் 2010 ரூபாய் 15/-



## கடவுளைக் கட்டிப்போட்ட கயிறுகள்



தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர்

அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியர்

# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

மலர் 2, இதழ் 7

அக்டோபர் 2010

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்**

**ஹரே கிருஷ்ண இயக்கத்தின் பத்திரிகை**

ஸ்ரீ ஸ்ரீமத் பக்திசித்தாந்த சரஸ்வதி தாகூர் அவர்களின் கட்டளையின்படி தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர், 1944இல் Back to Godhead என்ற பெயரில் ஓர் ஆங்கில பத்திரிகையை தொடங்கினார், அஃது இன்று வரை அவரைப் பின்பற்றுபவர்களால் நடத்தப்பட்டு வருகிறது. அப்பத்திரிகைக்கு அவரளித்த வழிகாட்டுதலைப் பின்பற்றி தமிழில் வெளிவருவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்*.

**பதிப்பாசிரியர்:** விஜய குமார் (விஜய கோவிந்த தாஸ்)

**தொகுப்பாசிரியர்:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**பிழைத் திருத்தம்:** அமுதவல்லி தேவி தாஸி, கேசவ பலராம தாஸ், சனக குமார தாஸ், பிரியதர்ஷினி ராதா தேவி தாஸி, ராம கிங்கர தாஸ், ராதா மதுராபதி தாஸ், ஜெய கிருஷ்ண தாஸ், ஜெய கோவிந்தராம தாஸ்

**வடிவமைப்பு:** ஸ்ரீ கிரிதாரி தாஸ்

**அலுவலக உதவி:** சுபாத்ம கௌரங்க தாஸ், சதீஷ் குமார்

**தட்டச்சு உதவி:** விசித்ரா

**வெளியிடுவோர்:** பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை, சென்னை.

**பதிவு அலுவலகம்:** மனை எண் 9-10, செந்தில் அவென்யூ, காமராஜபுரம், செம்பாக்கம், சென்னை - 600 073. தொலைபேசி: (044) 22272920

**சந்தா அலுவலகம்:** 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

**மின்னஞ்சல்:** btgtamil@pamho.net

**அச்சிட்டோர்:** MWN பிரஸ், சென்னை.

**பதிப்புரிமை** © 2010, பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை. அனைத்து உரிமைகளும் பதிப்பகத்தாருக்கு மட்டுமே.

பக்திவேதாந்த புத்தக
அறக்கட்டளை

2 கடவுளைக் காண தகுதி பெறுதல்

7 Back to Godhead தற்போது மலையாளத்தில்

8 கடவுளைக் கட்டிப்போட்ட கயிறுகள்

12 ஸ்ரீபாத மத்வாசாரியர்

15 திருமண ஊர்வலம்

18 பிரபுபாதர் நூற்றந்தாதி

20 போலி குருவின் தவறுகள் அம்பலம்

21 கார்த்திக் மாதமும் தாமோதர பூஜையும்

25 ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி கொண்டாட்டம்

30 ஸ்ரீமத் பாகவதம்

31 கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

32 தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

## கேள்விகளும் கருத்துகளும்

**ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் குறித்த தங்களது கேள்விகளையும் கருத்துகளையும் சந்தா அலுவலகத்தில் தெரிவிக்கவும்.**

### எமது குறிக்கோள்

- உண்மை, போலி; ஆன்மீகம், பௌதிகம்; நிரந்தரமானவை, தற்காலிகமானவை— ஆகியவற்றைப் பிரித்துப் பார்க்கும் அறிவொளியை மக்களுக்கு வழங்குதல்
- ஜட வாழ்வின் தவறுகளை பகிரங்கப்படுத்துதல்
- ஆன்மீக வாழ்வின் வேத நுணுக்கங்களில் மக்களை வழிகாட்டுதல்
- வேதப் பண்பாட்டைப் பாதுகாத்து அதனைப் பரப்புதல்
- பகவான் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவினால் வழங்கப்பட்ட இறைவனின் திருநாம உச்சாடனத்தைப் பரப்புதல்
- முழுமுதற் கடவுளான ஸ்ரீ கிருஷ்ணரை நினைப்பதற்கும் அவருக்குத் தொண்டு செய்வதற்கும் உதவி செய்தல்

# கடவுளைக் காண தகுதி பெறுதல்

**அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த ஸ்வாமி பிரபுபாதரால் 1973ஆம் ஆண்டு டிசம்பர் 25ஆம் தேதியன்று லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நிகழ்த்தப்பட்ட உரை.**

தத்-த்யானோத்ரிக்தயா பக்த்யா
விஷுத்த-திஷணா: பரே
தஸ்மின் நாராயண-பதே
ஏகாந்த-மதயோ கதிம்


அவாபுர் துரவாபாம் தே
அஸத்பிர் விஷயாத்மபி:
விதூத-கல்மஷா ஸ்தானம்
விரஜேனாத்மனைவ ஹி

“இடைவிடாத பக்தியின் தூய உணர்வின் மூலம் உன்னத நாராயணரான பகவான் கிருஷ்ணரால் ஆளப்படும் ஆன்மீக உலகை அவர்கள் (பாண்டவர்கள்) அடைந்தனர். அந்த உலகம் முழுமுதற் கடவுளின் மீது ஒருமுகப்படுத்தப்பட்ட மனதுடன் தியானிப்பவர்களால் அடையப்படுகிறது. கோலோக விருந்தாவனம் என்று அறியப்படும் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அந்த வாசஸ்தலத்தினை பௌதிக வாழ்வில் மூழ்கியிருப்பவர்களால் அடையமுடியாது. ஆனால் எல்லா பௌதிக களங்கங்களிலிருந்தும் முற்றிலுமாகக் கழுவப்பட்ட பாண்டவர்கள், தங்களது அதே உடலுடன் அந்த லோகத்தை அடைந்தனர்.” (ஸ்ரீமத் பாகவதம் 1.15.47-48)

## எப்போதும் கிருஷ்ணருடன் இருத்தல்

தியானம் என்றால் இடைவிடாது நினைத்துக் கொண்டிருத்தல் என்று பொருள். பாண்டவர்கள் கிருஷ்ணரை எப்பொழுதும், உண்ணும்போதும், உறங்கும் போதும், பேசும்போதும், போரிடும்போதும் நினைத்துக் கொண்டிருந்தனர். இதுவே கிருஷ்ண உணர்வு. அர்ஜுனன் போரிட்டபோது கிருஷ்ணர் அங்கு இருந்தார், பாண்டவர்கள் துரியோதனனுடன் அரசியலில் ஈடுபட்டபோதும் கிருஷ்ணர் அங்கு இருந்தார்.

தனது நண்பனான அர்ஜுனனுடன் கிருஷ்ணர் எப்போதும் பேசிக் கொண்டும்



தங்கிக் கொண்டும் உறங்கிக் கொண்டும் சாப்பிட்டுக் கொண்டும் இருந்தார். அர்ஜுனனும் இதர பாண்டவர்களும் வாழ்ந்ததைப் போல, நாமும் கிருஷ்ணருடன் வாழ்வதற்கு கிருஷ்ண உணர்வு நமக்கு உதவுகின்றது. கிருஷ்ண உணர்வு மிகவும் இன்பகரமானது, இதில் எந்த கஷ்டமும் இல்லை. நாம் நம்மை பழக்கப்படுத்தவேண்டும். கிருஷ்ணருடன் பாண்டவர்கள் இருந்ததைப் போல செயல்படுவது பக்தித் தொண்டால் மட்டுமே சாத்தியம். பாண்டவர்களின் பக்தியால் கிருஷ்ணர் அவர்களுடன் மிகவும் நெருக்கமாக இருந்தார்.

## அன்பிற்குக் கட்டுப்படும் கிருஷ்ணர்

பாண்டவர்களில் மூத்தவரான யுதிஷ்டிரரிடம் நாரத முனிவர், “யோகிகளாலும் ஞானிகளாலும் தத்துவவாதிகளாலும் கிருஷ்ணரை அடைய முடியாது. ஆனால் உங்களுடைய பக்தியால் கிருஷ்ணர் உங்களுடன் நண்பரைப் போல, அல்லது சில சமயங்களில் உங்கள் கட்டளையை நிறைவேற்றுபவரைப் போலவும் வாழ்ந்து வருகிறார்,” எனப் புகழ்ந்தார். ஒருமுறை துரியோதனனுடனான சமரசப் பேச்சுவார்த்தையின்போது, “இந்தக் கடிதத்தைக் கொண்டு போய் துரியோதனனிடம் கொடுங்கள்,” என்று பாண்டவர்கள் கிருஷ்ணரிடம் கூறினர். கிருஷ்ணரும் “சரி, நான் செல்கிறேன்,” என ஒப்புக் கொண்டார். சாதாரண ஒரு தொண்டனைப் போல அவர் நடந்து கொண்டார். அர்ஜுனனுக்கு சாரதியாக, பார்த்தசாரதியாக, சாதாரண தேரோட்டி போலவும் நடந்து கொண்டார்.

## கிருஷ்ணரைக் காணுதல்

நீங்கள் கிருஷ்ண பக்தரானால், இந்தப் பிறவியிலேயே கிருஷ்ணருடன் வாழலாம். கிருஷ்ணர் சர்வ வல்லமையுடையவர். உண்மையான பக்தருடன் அவர் பேசுவார், நடனமாடுவார், உணவருந்துவார்—எல்லாம் செய்வார். ப்ரேமாஞ்ஜன சுரித பக்தி விலோசநேன ஸந்த: ஸதைவ. பக்தியின் மூலம் கிருஷ்ணரிடம் அன்பை வளர்த்துக் கொண்ட சாதுக்கள், ஒவ்வொரு நிமிடமும் கிருஷ்ணரைக் காண்பர் என்று பிரம்ம சம்ஹிதையில் (5.38) கூறப்பட்டுள்ளது. ஸதைவ என்றால் ஒவ்வொரு கணமும் என்று பொருள்; சாதுக்கள் கிருஷ்ணரைத் தவிர வேறெதையும் காண்பதில்லை.

“நீங்கள் கடவுளைப் பார்த்தது உண்டா?” என்று அறிவற்றோர் கேட்கின்றனர்.

“ஐயா, ‘பார்த்தது’ என்பது கிடையாது. எப்போதும் ‘பார்த்துக் கொண்டிருக்கிறோம்’ என்பதே உண்மை,” என்று நாம் பதில் கூறலாம். கடவுளை ஒரே ஒருமுறை பார்த்தது என்ற பேச்சுக்கு இடமே இல்லை. ஸதைவ, சாதுக்கள் (பக்தர்கள்) அவரை ஒவ்வொரு கணமும் பார்த்துக் கொண்டிருக்கின்றனர்.

## எங்கும் இருக்கும் கிருஷ்ணர்

ஒவ்வொரு கணமும் கிருஷ்ணரை எவ்வாறு காண முடியும்? கிருஷ்ணர் ஏற்கனவே நம்முள்ளேயே இருக்கின்றார். ஈஸ்வர: ஸர்வ-பூதானாம் ஹ்ருத்-தேஷே (அ)ர்ஜுன திஷ்டதி. கிருஷ்ணருடைய இருப்பிடம் பகவத் கீதையில் (18.61) கொடுக்கப்பட்டுள்ளது. அவர் உங்கள் இதயத்தில் இருக்கிறார். கடவுளைப் பார்ப்பதற்கு வெகுதூரம் செல்ல வேண்டியதில்லை, எங்கு இருக்கிறீர்களோ அங்கிருந்தே காணலாம். ஸர்வ-பூதானாம் என்றால், கடவுள் மனித இனத்தினரிடம் மட்டுமல்லாமல் விலங்குகளுக்குள்ளும் இருக்கின்றார் என்று பொருள். மரங்கள், செடிகள், நீர்வாழ்வன, பூச்சி இனங்கள் என எல்லாவற்றிலும் இருக்கின்றார். உயர்ந்த



**“நீங்கள் கடவுளைப் பார்த்தது உண்டா?” என்று அறிவற்றோர் கேட்கின்றனர். “ஐயா, ‘பார்த்தது’ என்பது கிடையாது. எப்போதும் ‘பார்த்துக் கொண்டிருக்கிறோம்’ என்பதே உண்மை,” என்று நாம் பதில் கூறலாம்.**

படைப்பாளியான பிரம்மா முதல் சிறிய எறும்பு வரை அனைவருக்குள்ளும் இருக்கின்றார்.

கடவுள் எங்கும் இருக்கிறார். *அண்டாந்தர-ஸ்த பரமாணு-சயாந்தர-ஸ்தம்.* (பிரம்ம சம்ஹிதை 5.35) இந்த பிரபஞ்சத்திற்குள்ளும் உங்கள் இதயத்திற்குள்ளும் ஒவ்வொரு அணுவிலும் அவர் இருக்கின்றார். அவரைப் பார்ப்பதில் என்ன கஷ்டம்? அவரைக் காண்பதற்கு உங்களை நீங்கள் தகுதியுடையவராக்கிக் கொள்ள வேண்டும்.

## நம்மைத் தூய்மைப்படுத்துதல்

உண்மையில், நீங்கள் யாரிடமாவது அன்பு செலுத்தினால், அவரை நீங்கள் எப்பொழுதும் பார்க்கலாம்--அலுவலகத்தில் இருக்கும்போதும் உணவு உண்ணும்போதும் அவரைக் காணலாம். பௌதிகமாகவே இது சாத்தியம் என்றால், ஆன்மீகத்தில் சாத்தியமாகாதா என்ன? கடவுளின் மீதான அன்பினால் மட்டுமே, அதாவது பக்தியினால் மட்டுமே கடவுளைக் காண்பது சாத்தியம். *பக்த்யா விஷுத்த-திஷணா: பரே.* விஷுத்த என்றால் மிகவும் தூய்மையானது என்று பொருள். தற்சமயம் நமது உணர்வு தூய்மையாக இல்லை. அதனைத் தூய்மைப்படுத்துவதற்கு கிருஷ்ணருடன் நாம் உறவு கொள்ள வேண்டும். கிருஷ்ணரைப் பற்றிக் கேட்பதன் மூலம் அந்த உறவை எளிதாக ஏற்படுத்திக் கொள்ளலாம். எங்களது மையங்களுக்கு வருபவர்கள் கிருஷ்ணரைப் பற்றி ஏதுமறியாமல் இருக்கலாம், ஆனால் கடவுள் அவர்களுக்கு காதுகளை அளித்திருப்பதால் கிருஷ்ணரைப் பற்றிக் கேட்டுத் தெரிந்து கொள்ளலாம். நாங்கள் கிருஷ்ணரைப் பற்றி நிறைய விஷயங்களை விவாதிக்கின்றோம். நிறைய புத்தகங்களும் எழுதி இருக்கிறோம். பகவானைப் பற்றி 60 புத்தகங்கள் எழுத முடியும் என்று மக்களால் கற்பனைகூட செய்ய முடியாது, எந்த மதத்திலும் நீங்கள் கடவுளைப் பற்றி இவ்வளவு விஷயங்களைக் காண முடியாது.

நமது கவனத்தை கிருஷ்ண உணர்வில் செலுத்த வேண்டும். ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம, ஹரே ராம, ராம ராம, ஹரே ஹரே, என்று ஹரி நாம ஜபம் செய்யலாம். ஏராளமான நூல்கள் இருப்பதால், நம் வாழ்நாள் முழுவதும் கிருஷ்ணரைப் பற்றி படிக்கலாம். இருபத்து நான்கு மணி நேரம் படித்தாலும், முழுவதையும் படித்து முடிக்க வாழ்நாளையே ஒதுக்க வேண்டியிருக்கும்.

## ஒவ்வொரு நொடியிலும் ஒரு பத்திரிகை

மாயாபூரில் எனது குரு மஹாராஜர் நாதிய பிரகாஷ் என்ற தினசரி பத்திரிகையை வெளியிட்டு வந்தார். ஒருமுறை அரசியல்வாதி ஒருவர், “கடவுள் உணர்வைப் பற்றி நீங்கள் தினசரி பத்திரிகையை வெளியிட்டுக் கொண்டிருக்கிறீர்களா? அதில் என்ன எழுதிக் கொண்டிருக்கிறீர்கள்?” என ஆச்சரியப்பட்டார். தேவையற்ற அரசியல் செய்திகளைக் கொண்டு மட்டுமே நாளிதழ்கள் நிரப்பப்படுகின்றன என அரசியல்வாதிகள் நினைக்கிறார்கள். ஆன்மீக உலகின் செய்திகளைக் கொண்டு தினசரி பத்திரிகை கொண்டுவர முடியும் என்று நினைத்துக்கூட பார்க்க மாட்டார்கள், அதைப் பற்றி அவர்களுக்கு எந்த எண்ணமும் கிடையாது. ஆன்மீக உலகைப் பற்றியும் தெரியாது.

எனது குரு மஹாராஜர் விளக்கினார்: “கடவுளின் சக்தியில் கால் பங்கு மட்டுமே இந்த பௌதிக உலகம்; மீதமுள்ள முக்கால் பங்கு ஆன்மீக உலகம். அந்த கால் பங்கில் எண்ணற்ற பிரபஞ்சங்கள் உள்ளன, ஒவ்வொரு பிரபஞ்சத்திலும் கோடிக்கணக்கான கிரகங்கள் உள்ளன. அந்தக் கோடிக்கணக்கான கிரகங்களில் இந்த பூமியானது ஒரு சிறு கிரகம்.


নদীয়া-প্রকাশ

ஸ்ரீல பிரபுபாதரின் குருவான ஸ்ரீல பக்திசித்தாந்த சரஸ்வதியினால் வெளியிடப்பட்ட **நதியா பிரகாஷ்** என்னும் வங்காள நாளிதழின் ஒரு பிரதி

**கடவுளைப் பற்றி தினமும் ஒரு பத்திரிகை அல்ல; ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒரு பத்திரிகையை வெளியிட முடியும்.**

இந்த பூமியில் எத்தனையோ நகரங்கள் உள்ளன. ஒவ்வொரு நகரத்திலும் ஏராளமான நாளிதழ்கள் வெளிவருகின்றன.

"இப்பொழுது ஆன்மீக உலகை எடுத்துக் கொள்வோம். அது பௌதிக உலகைவிட மும்மடங்கு பெரியது. ஏராளமான ஆன்மீக கிரகங்களும் பிரபஞ்சங்களும் ஏராளமான செயல்களுடன் அங்கு இருக்கின்றன. அவ்வாறு இருக்கும் பட்சத்தில், கடவுளைப் பற்றியும் ஆன்மீக உலகைப் பற்றியும் தினசரி பத்திரிகை வர இயலாதா என்ன? கடவுளைப் பற்றி தினமும் ஒரு பத்திரிகை அல்ல; ஒவ்வொரு நிமிடத்திற்கும் ஒரு பத்திரிகையை வெளியிட முடியும். துரதிர்ஷ்டவசமாக, ஆன்மீகச் செய்திகளுக்கு வாடிக்கையாளர்கள் யாரும் இல்லை என்பது தான் பிரச்சனை. ஆனால் பௌதிகச் செய்திகளுக்கு ஏராளமான வாடிக்கையாளர்கள் உள்ளனர். தினம் ஒரு பத்திரிகை வருவதைப் பற்றி நீங்கள் ஆச்சரியப்படுகிறீர், ஆனால் நொடிக்கு ஓர் ஆன்மீக இதழை எங்களால் வெளியிட முடியும்."

## திடமான உறுதி

ஆன்மீக உலகின் செய்திகளில் நாம் ஆர்வத்துடன் இருக்க வேண்டும். இப்பிறவியிலேயே முழுமுதற் கடவுளின் திருநாட்டை அடைய யாரொருவர் உறுதியுடன் இருக்கிறார்களோ, அவர்களால் கிருஷ்ண உணர்வை அடைய முடியும். அந்த திடமான நோக்கம் பகவத் கீதையில் (2.41) விளக்கப்படுகிறது.

வ்யவஸாயாத்மிகா புத்திர்
ஏகேஹ குரு-நந்தன
பஹு-ஷாகா ஹ்யனந்தாஷ் ச
புத்தயோ (அ)வ்யவஸாயினாம்

இவ்வழியிலுள்ளோர் தங்களது குறிக்கோளில் திடமான உறுதியுடன் இருப்பர், இவர்களது இலட்சியம் ஒன்றே. குரு வம்சத்தின் செல்வனே (அர்ஜுனா), உறுதியற்றவரது அறிவோ பல கிளைகளைக் கொண்டது.

## மனிதப் பிறவியின் முக்கியத்துவம்

மனிதப் பிறவி பூனைகளையும் நாய்களையும் போன்ற சாதாரண பிறவி அல்ல. மனிதப் பிறவியில் உயர்ந்த அறிவு கொடுக்கப்பட்டுள்ளது. ஆன்மீக அறிவை வளர்த்துக் கொள்வதன் மூலம் மீண்டும் முழுமுதற் கடவுளின் திருநாட்டை அடைய முடியும். அவ்வாறு இருக்கையில், ஏன் நாய்களையும் பூனைகளையும் போல கால விரயம் செய்ய வேண்டும்? என்று ஒருவர் எண்ணிப் பார்க்க வேண்டும், அது மிக அவசியம். உண்பதற்கும் உறங்குவதற்கும் இனப்பெருக்கம் செய்வதற்கும் நாய்களும் பூனைகளும் சுறுசுறுப்புடன் செயல்படுகின்றன. ஒருநாள் அவை இறக்க நேரிடும். அதைச் செய்வதற்கு நாம் ஏன் நமது நேரத்தை விரயம் செய்ய வேண்டும்?

நம்மிடம் புத்தி உள்ளது, கிருஷ்ணர் நமக்கு உயர்ந்த வாழ்க்கையை அளித்திருக்கிறார். பூனைகளையும் நாய்களையும் போல வீதிகளில் இல்லாமல் நாம் உறங்குவதற்கு அறைகள் உள்ளன. நேர்த்தியான உணவுப் பொருட்களையும் அவர் அளித்திருக்கிறார். பால், பழங்கள், தானியங்கள் போன்றவை கிருஷ்ணருக்கு நைவேத்தியம் செய்ய உகந்தவை. ஒவ்வொரு உயிரினத்திற்கும் ஒவ்வொரு வகை உணவினை கிருஷ்ணர் கொடுத்திருக்கிறார். பன்றிகளுக்கு கழிவுப்பொருளையும் மனிதர்களுக்கு நேர்த்தியான பால், பழங்கள், தானியங்கள் போன்றவற்றையும் கொடுத்திருக்கிறார். எல்லா உணவும் எல்லாருக்கும் ஏற்றதல்ல. ஒருவரின் உணவு மற்றவரின் விஷம். மலம்கூட ஒருவகையான உணவே. கல்லும்கூட ஒருவகை உணவு. புறாக்கள் கற்களை உண்டு அவற்றை ஜீரணிக்கும் திறன் பெற்றவை. இரும்பினாலான துப்பாக்கிக் குண்டுகளைவிட கடினமான பழங்களை ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் கொரில்லாக்கள் உண்கின்றன. துப்பாக்கிக் குண்டுகளைச் சுத்தியலால் அடித்து வளைக்கலாம், ஆனால் அந்த பழங்களை அவ்வாறு வளைக்க இயலாது. இருப்பினும், வேர்க்கடலையை தின்பதைப் போல அந்த கொரில்லாக்கள் அப்பழங்களை சாதாரணமாக மென்று தின்கின்றன.

## மலமாக, சாம்பலாக, மண்ணாக மாறும் உடல்

மனித வர்க்கத்தினர் முழுமுதற் கடவுளின் திருநாட்டை அடைய தீர்மானித்து அதற்குத் தகுந்த உணவை ஏற்க வேண்டும். அவர்கள் மாமிசம் உண்ணக் கூடாது. (சாதம், ரசகுல்லா, பூரி போன்ற) சாத்வீக உணவு வகைகள் அவர்களுக்கு உகந்தவை. உடலைப் பராமரிப்பதற்காக நாம் நினைத்ததை உண்ணக் கூடாது. இவ்வுடல் இறப்பிற்குப் பின், மலமாக, சாம்பலாக, அல்லது மண்ணாக மாறிவிடும். உடலைப் புதைத்தால் அது மண்ணோடு மண்ணாக மாறிவிடும். இந்துக்கள் செய்வதைப் போல உடலை எரித்தால் அது சாம்பலாகிவிடும். பார்சி மக்களைப் போல உடலை கழுகுகளுக்கு எறிந்துவிட்டால், அவை சாப்பிட்ட பின்னர் அது கழுகின் மலமாக மாறும். அவ்வளவு தான்.

நமது அழகிய உடல், மலம், மண், அல்லது சாம்பல் ஆகிய மூன்றில் ஏதாவது ஒன்றாக மாறும். அதற்காகவா நாம் இவ்வளவு கவனம் எடுத்துக் கொள்கிறோம். ஆனால் உடலினுள் வசிப்பவரை மறந்துவிட்டோம். "நான் இவ்வுடல்" என்று மூன்றாம் தர முட்டாள்கள் நினைக்கிறார்கள். நான் அமெரிக்கன், நான் இந்தியன், நான் வெள்ளையன், நான் கறுப்பன், நான் இந்து, நான் முஸ்லீம், நான் கிருஸ்துவன்—என அனைவரும்

நினைத்துக் கொண்டிருப்பதால், தற்போதைய உலகம் மூன்றாம் தர முட்டாள்களால் நிரம்பி உள்ளது.

### தற்காலிகமான உடல்

"நான் இவ்வுடல்" என்னும் தவறான அபிப்பிராயத்தில் இருந்து ஒருவர் முழுவதுமாக தூய்மையடைய வேண்டும். *விரஜேன ஆத்மனைவ.* விரஜேன என்றால் முற்றிலும் தூய்மையடைதல் என்று பொருள். முற்றிலும் தூய்மையான நிலையை அடைதல் மிகவும் கடினம் என்பதால், *அவாபுர் துரவாபாம்* என்று கூறப்படுகிறது. ஆனால் பாண்டவர்கள் அந்த உயர்நிலையை அடைந்தனர். அப்படியெனில், யாருக்கு அது கடினம்? *அஸத்பி:,* யாரொருவர் தற்காலிக வஸ்துகளின் மேல் பற்றுதல் கொண்டுள்ளாரோ, அவருக்கு முற்றிலும் தூய்மையான நிலையை அடைதல் கடினமானதாகும். *அஸத்* என்றால் 'தற்காலிகமான' என்று பொருள். நிரந்தரமானவை, தற்காலிகமானவை என இரண்டு விதமான வஸ்துகள் உள்ளன. தற்காலிகமான வஸ்துகள் சில வருடங்களோ, சில மணி நேரமோ, சில நிமிடங்களோதான் இருக்கும். இந்த பௌதிக உலகமும், பௌதிக உடலும் *அஸத்* - தற்காலிகமானது என அறியப்படுகிறது. இதை அனைவரும் அறிவர். ஒரு குறிப்பிட்ட நாளில் இவ்வுடல் பிறக்கும், சில வருடங்கள் இருக்கும், இனப்பெருக்கம் செய்யும், வேறு உருவத்திற்கு மாற்றமடையும், முதுமையடையும், அழியத் துவங்கும், ஒரு நாள் அழிந்துவிடும்.

இந்த ஆறு வித மாற்றங்களை *ஸத்-விகார* என்பர். இது முன்னேற்றம் அல்ல. ஒருவர் வயதில் முன்னேறுகிறார் என்றால், அவர் இறப்பை நோக்கி முன்னேறுகிறார் என்று அர்த்தம். எனக்கு 78 வயது. நான் எழுபத்தி எட்டு வருடங்கள் இறந்துள்ளேன்; இரண்டு அல்லது ஐந்து வருடங்கள் மீதமுள்ளது. உடல் நிலையாக இருக்காது, பிறந்த பொழுதிலிருந்தே அஃது இறக்கத் தொடங்கிவிடும். ஒரு தாயிடம், குழந்தையின் வயது என்ன என்று கேட்டால், "ஒரு மாதம்" என்பாள். அப்படியெனில், ஒரு மாதம் அக்குழந்தை ஏற்கனவே இறந்துவிட்டது என்று பொருள்.

தற்காலிகமான பொருள்களிடம் பற்று கொண்டவர்களுக்கு ஆன்மீகத் தன்னுணர்வு என்பது கடினம். ஏன்? *விஷயாத்மபி:* அவர்கள் பௌதிக வாழ்வின் நான்கு கோட்பாடுகளில் பற்றுதல் கொண்டுள்ளனர். உண்ணுதல், உறங்குதல், ஆண் பெண் உறவு, பாதுகாத்தல் ஆகியவற்றில் மூழ்கியுள்ளவன், அவற்றைத் தாண்டி வருதல் அவசியம். இச்செயல்கள் விலங்குகளிடையேயும் உள்ளன என்று நிதான புத்தியுடன் சிந்திக்க வேண்டும். விலங்குகளின் விஷயத்தில் நானும் ஆர்வம் கொண்டால், எனக்கும் நாய்க்கும் என்ன வித்தியாசம்?

### உடலுக்கு அப்பாற்பட்ட உணர்வு

இவற்றிற்கு அப்பாற்பட்ட செய்திகளை பகவத் கீதை நமக்குக் கொடுக்கின்றது. *அவிநாஷி து தத் வித்தி யேன ஸர்வம் இதம் ததம்.* (பகவத் கீதை 2.17) இவ்வுடல் அழியக் கூடியது, ஆனால் நிரந்தரமானது ஒன்று உள்ளது. அஃது உடல் முழுவதும் வியாபித்திருக்கிறது. கிள்ளினால் வலியை உணருகிறீர்கள்; ஏனென்றால், உணர்வு உடல் முழுவதும் பரவியுள்ளது. உணர்வு என்பது நிரந்தரமானது. ஒருவரின் உடலில் இருந்து உணர்வு வெளியே சென்றவுடன், அவரது கையை வெட்டினாலும் அவ்வுடலிலிருந்து எந்த எதிர்ப்பும் இருக்காது.

உணர்வைப் புரிந்துகொள்ள விரும்பாதவர்களும் உணர்வின் மூலத்தை அறிய விரும்பாதவர்களும் *அஸத்* எனப்படுவர். ஆன்மீக வாழ்க்கை அவர்களுக்குப் புரியாது. உணர்வைப் புரிந்துகொள்வதே ஆன்மீக வாழ்வின் முதல் படி என்று பகவத் கீதை கூறுகிறது. *தேஹினோஸ்மின் யதா தேஹே:* உடலின் உரிமையாளர் ஆத்மா என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். யார் இதைப் புரிந்துகொள்வார்கள்? *விதுதா-கல்மஷா.* பாவ காரியங்களிலிருந்து விடுபட்டவர்கள் புரிந்துகொள்வர். அதனால்தான் பாவ காரியங்களில் ஈடுபட வேண்டாம் என நாங்கள் வலியுறுத்துகிறோம். பாவ காரியங்கள் என்றால் என்ன? புலால் உண்ணுதல், போதைப் பொருள்களை உட்கொள்ளுதல், சூதாடுதல், மற்றும் தகாத உடலுறவு ஆகிய நான்கும் மாபெரும் பாவ காரியங்களாகும். ஆன்மீக வாழ்க்கையைப் புரிந்துகொள்ள இவற்றிலிருந்து ஒருவன் தன்னைத் தூய்மைபடுத்திக்கொள்ள வேண்டும். "நான் என்ன செய்ய விரும்புகின்றேனோ அதைச் செய்வேன்" என்று நீங்கள் நினைத்தால், பிறவிதோறும் இந்த பௌதிக உலகிலேயே இருக்க வேண்டியதுதான். இதைப் புரிந்துகொள்ளுங்கள். மிக்க நன்றி!

(தமிழாக்கம்: அமுதவல்லி தேவி தாஸி)

## சந்தாதாரர்களின் கவனத்திற்கு...

தங்களது ரசீதில் இருக்கும் எண், தங்களுடைய அடையாள எண்ணாகும். தங்களது குறைகளைத் தெரிவிக்கவோ, முகவரி மாற்றத்தைத் தெரிவிக்கவோ, தாங்கள் எமது சந்தா அலுவலகத்தைத் தொடர்புகொள்ளும்போது, தங்களது அடையாள எண்ணைக் குறிப்பிடுதல் அவசியம். தங்களுக்கு அனுப்பப்படும் பிரதியில் இருக்கும் முகவரியின் வலது மேற்பகுதியில் தங்களது அடையாள எண்ணும், வலது கீழ்ப்பகுதியில் தங்களது சந்தா முடிவுறும் மாதமும் கொடுக்கப்பட்டுள்ளன.

# தற்போது மலையாளத்தில்

Back to Godhead பத்திரிகையின் மலையாளப் பதிப்பு "பகவத் தரிசனம்" என்ற பெயரில் ஜூலை 31ஆம் நாளன்று சிறப்பான முறையில் கேரள மாநிலத்தின் தலைநகரமான திருவனந்தபுரத்தில் வெளியிடப்பட்டது. திரைப்படத் துறை கலைஞரான திரு. சூர்ய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பத்திரிகையை வெளியிட்டார். இஸ்கானின் கேரள மண்டல காரியதரிசியான தவத்திரு. பக்தி வினோத ஸ்வாமி அவர்களிடமிருந்து காவல்துறை பயிற்சிக் கல்லூரியின் முதல்வரான திரு. இராஜகோபால் அவர்கள் முதல் பிரதியை பெற்றுக் கொண்டார்.



இஸ்கான் திருவனந்தபுரம் கோவிலின் தலைவரான திரு. ஜகத் சாக்ஷி தாஸ பிரம்மசாரி அவர்கள் வரவேற்புரை நிகழ்த்தினார். அரபிக், ரஷ்யன் உட்பட எண்பதுக்கும் மேற்பட்ட மொழிகளில் புத்தகங்களை வெளியிடும் பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளை குறித்து அறிமுகம் செய்து வைத்தார்.

பக்திவேதாந்த புத்தக அறக்கட்டளையின் கேரளப் பணிகளை கவனித்து வருபவரான தவத்திரு. பக்தி வினோத ஸ்வாமி தலைமைச் சொற்பொழிவாற்றினார். 1944இல் இப்பத்திரிகை ஸ்ரீல பிரபுபாதரால் எவ்வாறு தொடங்கப்பட்டது என்பதையும், இறுதியில் தற்போது பல்வேறு சிரமங்களையும் தாண்டி 66 வருடங்களுக்குப் பிறகு மலையாளத்தில் வருவதையும் அவர் உணர்ச்சிப்பூர்வமாக எடுத்துரைத்தார். கேரள சுற்றுலாத் துறையினர், கேரளாவை "கடவுளின் சொந்த நாடு" என்று அழைக்கின்றனர். எனவே, கடவுளின் சொந்த நாட்டைச் சேர்ந்தவர்களைக் கடவுளிடம் அழைத்துச் செல்வதில் *பகவத் தரிசனம்* தனித்து விளங்கும் என்று கூறினார். பகவத் தரிசனம் என்பது பௌதிகச் செய்திகளை வெளியிடும் பௌதிகப் பத்திரிகை அல்ல, மாறாக, ஆன்மீக உலகின் உண்மைகளை புரிந்துகொண்டு, அதனுடன் தொடர்புபடுத்தி, அதனுள் நுழைவதற்கு மக்களுக்கு உதவும் பத்திரிகையாகும். புதுமையையும் வேறுபாட்டையும் விரும்பும் கேரள மக்கள் இந்த தன்னிகரற்ற பத்திரிகையை முழு உணர்வுடன் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று அவர் வேண்டுகோள் விடுத்தார்.



தலைமை விருந்தினரான திரு. சூர்ய கிருஷ்ணமூர்த்தி அவர்கள் பேசுகையில், *லோக ஸமஸ்த: ஸுகினோ பவந்து* (உலகிலுள்ளோர் அனைவரும் மகிழ்ச்சியாக வாழ வேண்டும்) என்னும் வேத மந்திரத்தின் நவீன கால உதாரணமாக இஸ்கான் திகழ்வதாகக் குறிப்பிட்டார். மும்பை ஜுஹு கடற்கரையில் அமைந்துள்ள இஸ்கான் கோவிலுக்கு விஜயம் செய்தபோது, இஸ்கான் பக்தர்களுடைய பிரார்த்தனைகள் தங்களது சுய நலனுக்காகவோ இயக்கத்தின் நலனுக்காகவோ அல்ல என்றும் ஒட்டுமொத்த உலக நலனுக்கானது என்றும் தான் உணர்ந்ததாக அவர் தனது அனுபவத்தைப் பகிர்ந்து கொண்டார். புதுமையை வரவேற்பதில் கேரளர்களின் ஆர்வம் குறித்து பக்தி வினோத ஸ்வாமி கூறியதை சுட்டிக் காட்டிய திரு. சூர்ய கிருஷ்ணமூர்த்தி, கடவுளின் சொந்த நாட்டைச் சார்ந்த அனைவரும் ஹரே கிருஷ்ண இயக்கத்தையும் பகவத் தரிசனம் பத்திரிகையையும் ஆர்வத்துடன் வரவேற்பர் என்று உறுதியளித்தார்.

மலையாள *பகவத் தரிசனம்* பத்திரிகையில் ஆர்வமுள்ளோர், திரு கோவர்த்தன கிரி தாஸ் அவர்களை bhagavad.darshanam@gmail.com என்ற முகவரியில் அல்லது 96058 22635 என்னும் கைபேசியில் தொடர்பு கொள்ளலாம். வருட சந்தா ரூ.180 மட்டுமே. மூன்று வருட சந்தா ரூ.540 மட்டுமே (தபால் செலவு தனி).

(தகவல்: கோபால கௌர குரு தாஸ்)



# கடவுளைக் கட்டிப் போட்ட கயிறுகள்

அன்னை யசோதை பகவான் கிருஷ்ணரைக்
கயிற்றால் கட்டுதல்

**தெய்வத்திரு அ.ச.பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அருளிய, “கிருஷ்ணா, புருஷோத்தமராகிய முழுமுதற் கடவுள்” என்னும் புத்தகத்தின் ஒன்பதாம் அத்தியாயம்**

ஒரு நாள் தன் வேலைக்காரி வெவ்வேறான பணிகளில் ஈடுபட்டிருந் ததைக் கண்ட அன்னை யசோதை தயிர்கடையும் பொறுப்பைத் தானே மேற் கொண்டாள். தயிர்கடையும்போது அவள் கிருஷ்ணரின் பால்ய லீலைகளைப் பற்றிப் பாடிக் கொண்டு தனது மகனைப் பற்றிய எண்ணத்தில் மகிழ்ச்சியுடன் இருந்தாள்.

புடவையின் தலைப்பை இறுக்கமாக அணிந்தபடி அவள் தயிர்கடைந்து கொண்டிருந்தபோது, தனது மகனைப் பற்றிய ஆழ்ந்த அன்பின் காரணமாக அவளது மார்பிலிருந்து பால் சுரந்தது. இரு கரங்களையும் கொண்டு மிகவும் கடின உழைப்புடன் தயிர் கடைந்தபோது, அவளது மார்புகள் அசைந்தன. அவள் அணிந்திருந்த வளையல்களும் கங்கணங்களும் ஒன்றோடொன்று உரசி இனிய ஒலியை எழுப்பின, அவளது காதணிகள் அசைந்தாடின. அவள் முகத்தில் வியர்வைத் துளிகள் அரும்பின, தலையில் அணிந்திருந்த மலர்கள் அங்குமிங்கும் சிதறின. இவ்வாறு ரம்யமாகக் காட்சியளித்த அன்னை யசோதையின் முன்பு குழந்தை கிருஷ்ணர் வந்தார். அவருக்குப் பசியெடுக்க, தனது அன்னையின் அன்பை அதிகரிக்க விரும்பிய அவர், அவள் தயிர்கடைவதை உடனடியாக நிறுத்த வேண்டுமென்று விரும்பினார். அவளது முதல் வேலை தனக்குப் பாலூட்டுவதே என்றும், பின்பு தயிர்கடையலாம் என்றும் அவர் தெரிவித்தார்.

அன்னை யசோதை தன் மகனை மடியில் எடுத்து பாலூட்டினாள். கிருஷ்ணர் பாலருந்தியபோது அவள் தன் குழந்தையின் முக அழகைக் கண்டு மகிழ்ந்து புன்னகை பூத்தாள். அப்போது அடுப்பில் வைத்திருந்த பால் பொங்கத் துவங்கியது. பால் சிந்திவிடுவதை நிறுத்துவதற்காக அன்னை யசோதை உடனடியாக கிருஷ்ணரை மடியிலிருந்து இறக்கிவிட்டு அடுப்படிக்குச் சென்றாள். அச்செயலால் கிருஷ்ணர் கடும் கோபமடைந்தார், அப்பெரும் சினத்தினால் அவரது கண்களும் உதடுகளும் சிவந்தன. பற்களையும் உதடுகளையும் கடித்தபடி அவர் அங்கிருந்த வெண்ணெய்த் தாழியை உடைத்தார். அதிலிருந்த வெண்ணெயை எடுத்துக் கொண்டு தனியிடத்திற்குச் சென்று பொய்யான கண்ணீரை வடித்தபடி, வெண்ணெயை உண்ணத் தொடங்கினார்.

இதற்குள் யசோதை பால் பொங்கிய பாத்திரத்தைச் சரியாக வைத்துவிட்டு தயிர்கடையும் இடத்திற்குத் திரும்பி னாள். வெண்ணெய் தாழி உடைந் திருந்ததைக் கண்டாள். மகனை அங்கு காணாததால், பானையை உடைத்தது அவன் வேலையாகத்தான் இருக்கும் என்று முடிவு செய்தாள். முகத்தில் புன்னகை பூக்க, “குழந்தை மிகவும் சாமர்த்தியசாலி. பானையை உடைத்ததற்காகக் கிடைக்கும் தண்டனைக்குப் பயந்து தலைமறைவாகிவிட்டான்,” என அவள் எண்ணினாள், பல இடங்களில் கூவிகூவித் தேடிய பிறகு, குப்புறக் கவிழ்க்கப்பட்ட மர உரலின் மேல் அவர் அமர்ந்திருப்பதைக் கண்டாள். அதில் உட்கார்ந்திருந்தபடி மேலே உரியில் தொங்கிக் கொண்டிருந்த பானையிலிருந்து வெண்ணெயை எடுத்து குரங்குகளுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தார். தனது குறும்புத்தனத்தை உணர்ந்திருந்த அவர், அம்மா வந்துவிடுவாளோ என்ற பயத்தால் அக்கம் பக்கம் திரும்பிப் பார்த்துக் கொண்டிருந்தார். அப்படியிருந்த மகனைக் கண்ட அவள் பின்புறமாகச் சத்தமின்றி அணுகினாள். ஆனால் கிருஷ்ணரோ கையில் கோலுடன் அன்னை வருவதைக் கண்டுவிட்டார், உடனே பயந்து உரலிலிருந்து எழுந்து ஓடத் தொடங்கினார். அன்னை யசோதை அவரை மூலைக்கு மூலை துரத்திப் பிடிக்க முயற்சித்தாள். ஆனால் யோகத்தில் சிறந்த மகான்களாலும் எட்ட முடியாத புருஷோத்தமரான முழுமுதற் கடவுளைக்

கைப்பற்றுவது சாத்தியமா? அதாவது, யோகிகளாலும் கற்பனையாளர்களாலும் ஒருபோதும் கைப்பற்ற இயலாத புருஷோத்தமரான முழுமுதற் கடவுள், தன் பெரும் பக்தையான அன்னை யசோதையை மகிழ்விப்பதற்காக சிறு குழந்தையாக விளையாடிக் கொண்டிருந்தார். மெல்லிய இடையும் பருத்த உடலும் கொண்ட யசோதையால் விரைந்து ஓடும் தனது குழந்தையை எளிதில் துரத்திப் பிடிக்க முடியவில்லை. இருப்பினும் அவருக்கு ஈடுகொடுத்து வேகமாக ஓட அவளும் இயன்றவரை முயற்சித்தாள். அவளின் தலைமுடி அவிழ்ந்து அதில் அணிந்திருந்த மலர்கள் தரையில் சிதறின. களைப்படைந்த போதிலும் எப்படியோ அந்தப் பொல்லாத சிறுவனைப் பிடித்து விட்டாள். பிடிபட்ட கிருஷ்ணருக்கு அழுகை வரும் போலிருந்தது. கருமையான மையினால் அழகுபடுத்தப்பட்டிருந்த தன் கண்களைக் கைகளால் கசக்கினார். தன் அருகில் நின்றிருந்த அன்னையின் முகத்தைக் கண்டதும் அவரது கண்கள் பயத்தால் அலை பாய்ந்தன.

கிருஷ்ணரின் தேவையற்ற பயத்தைக் கண்ட யசோதை அவரது நலனைக் கருதி அவரின் பயத்தைப் போக்க எண்ணினாள். குழந்தையின் நலனில் மிகுந்த அக்கறை கொண்டிருந்த அன்னை யசோதை, "குழந்தை என்னிடம் மிகவும் பயம் கொள்ளத் தொடங்கினால் அதன் விளைவு என்னவாகும்?" என்று எண்ணினாள். பின்னர், அவள் தன் கையிலிருந்த குச்சியைத் தூர எறிந்தாள். ஏதேனும் தண்டனை வழங்க வேண்டும் என்பதற்காக, அவனது கைகளைக் கயிற்றால் கட்ட நினைத்தாள். புருஷோத்தமரான முழுமுதற் கடவுளைக் கயிற்றால் கட்டுவது சாத்தியமல்ல என்பதை அவள் அறியாள். கிருஷ்ணர் ஒரு சிறு குழந்தை என்று அன்னை யசோதை எண்ணிக் கொண்டிருந்தாள்; இக்குழந்தை வரம்பிற்குள் அடங்காதவர் என்பதை அவள் அறிந்திருக்கவில்லை. அவருக்கு உள்ளோ புறமோ, ஆதியோ அந்தமோ கிடையாது. அவர் வரம்பற்றவர், எங்கும் நிறைந்தவர். உண்மையில் பிரபஞ்சத் தோற்றம் முழுவதும் அவரே. அவ்வாறு இருப்பினும் கிருஷ்ணரை தன் குழந்தையென்று யசோதை எண்ணியிருந்தாள். அவர் புலன்களின் எல்லைகளுக்கு அப்பாற்பட்டவராக இருந்தாலும், அவரை மர உரலில் கட்டிப்போட அவள் முயற்சித்தாள். ஆனால் அவரைக் கட்டிப்போட அவள் முயற்சித்தபோது, கட்டுவதற்கு அவளிடம் இருந்த கயிறு இரு அங்குலம் சிறியதாக இருப்பதைக் கண்டாள். வீட்டிலிருந்து மேலும் சில கயிறுகளை சேகரித்து அதனுடன் இணைத்தாள்; அப்போதும்கூட கயிறு அதே அளவிற்குக் குறைவாக இருப்பதைக் கண்டாள். இவ்வாறு வீட்டிலிருந்த கயிறுகளையெல்லாம் எடுத்து இணைத்து அவரைக் கட்ட முயற்சித்தபோது, மீண்டும் அதே இரண்டு அங்குல அளவிற்குக் கயிறு பற்றாமல் போயிற்று. அன்னை யசோதைக்குச் சிரிப்பு வந்தது, ஆனால் நடப்பதைக் கண்டு ஆச்சரியப்பட்டாள். எப்படி இவ்வாறு நடக்கிறது?



மகனைக் கட்டிப்போடுவதற்கான தனது முயற்சியில், அன்னை யசோதை களைத்துப் போனாள். அவளுக்கு உடம்பெல்லாம் வியர்த்தது, தலையில் அணிந்திருந்த மலர்மாலை கீழே விழுந்துவிட்டது. தனது அன்னையின் கடுமையான முயற்சியைக் கண்ட

பகவான் கிருஷ்ணர், அவளிடம் பரிவு கொண்டு கயிற்றால் கட்டப்பட இசைந்தார். அன்னை யசோதையின் மனையில் சாதாரணக் குழந்தையாக விளையாடிய கிருஷ்ணர் தனது பக்குவமான லீலைகளைத் தேர்ந்தெடுத்து வெளிப்படுத்தினார். உண்மையில் புருஷோத்தமராகிய முழுமுதற் கடவுளை யாராலும் கட்டுப்படுத்த முடியாது. தூய பக்தன் கடவுளின் தாமரைத் திருவடிகளில் முழுமையாகச் சரணடைந்துவிடுகிறான்; அந்த பக்தனை அவர் காப்பாற்றலாம், அல்லது அழிக்கலாம். ஆனால் பக்தனோ சரணடைந்து இருத்தல் என்னும் தனது நிலையை ஒருபோதும் மறப்பதில்லை. அதுபோலவே பக்தனின் பாதுகாப்பில் தன்னை ஒப்படைப்பதில் பகவானும் திவ்யமான இன்பத்தைக் காண்கிறார். அன்னையாகிய யசோதையிடம் கிருஷ்ணர் சரணடைந்ததிலிருந்து இது தெளிவாகிறது.

கிருஷ்ணர் தன் பக்தர்களுக்கு எல்லா வகையான முக்திகளையும் அளிக்க வல்லவர். ஆனால் யசோதைக்கு அவர் அளித்த உயர்ந்த வரம் பிரம்மதேவன், அல்லது சிவபெருமான், அல்லது இலட்சுமியால்கூட அனுபவிக்கப்படாத ஒன்று.

யசோதை மற்றும் நந்த மஹாராஜரின் மகனாக அறியப்படும் புருஷோத்தமரான முழுமுதற் கடவுளை யோகிகளும் கற்பனையாளர்களும் ஒருபோதும் முழுமையாக அறிய முடிவதில்லை. அவர் பரமானந்தத்தின் உன்னத இருப்பிடம் என்பதையும் அவர்கள் உணர்வதில்லை.



ஆனால் அவர் தனது பக்தர்களால் எளிதாக அடையப்படக் கூடியவர்.

மகனை உரலில் கட்டிய பின்னர், அன்னை யசோதை வீட்டு வேலைகளில் ஈடுபடத் தொடங்கினாள். அச்சமயத்தில், மர உரலில் கட்டப்பட்டிருந்த கிருஷ்ணர், தம் முன்னே இரண்டு அர்ஜுன மரங்கள் நிற்பதைக் கவனித்தார். “அன்னை யசோதை முதலில் எனக்குப் போதுமான பால் கொடுக்காமல் விட்டுப் போனதால் தயிர்ப் பானைகளை உடைத்து வெண்ணெயை குரங்குகளுக்குக் கொடுத்தேன். இப்போது அவள் என்னை மர உரலில் கட்டிப் போட்டிருக்கிறாள். ஆகையால் இப்போது முன்பைவிட அதிகமான குறும்புத்தனம் செய்ய வேண்டும்,” என்று ஆனந்தத்தின் இருப்பிடமான பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் தனக்குள் எண்ணினார். இவ்வாறாக மிகவும் உயரமான அர்ஜுன மரங்கள் இரண்டையும் வீழ்த்த அவர் தீர்மானித்தார்.

அந்த இரண்டு அர்ஜுன மரங்களுக்கும் பூர்வ சரித்திரம் உள்ளது. அம்மரங்கள் தம் முந்தைய பிறவியில், குபேரனின் மகன்களாக, நளகூவரன், மணிக்ரீவன் என்ற பெயர்களில் பிறந்திருந்தனர். நல்ல அதிர்ஷ்டத்தினால் அம்மரங்கள் பகவான் கிருஷ்ணரின் பார்வையில் தென்பட்டன. அவர்கள் அவ்வாறு மரங்களாக இருக்கும்படி நாரதர் சாபமிட்டிருந்தார்; முந்தைய பிறவியில் குடிபோதையினால் அவர்கள் நினைவிழந்திருந்த போது அவர் அச்சாபத்தினை வழங்கியிருந்தார். பின்னர், பகவான் கிருஷ்ணரை நேருக்கு நேர் காண்பதற்கான மிகவுயர்ந்த ஆசியையும் நாரதர் அவர்களுக்கு நல்கியிருந்தார். இந்த வரலாறு அடுத்த அத்தியாயத்தில் உரைக்கப்படும்.

## (அத்தியாயம் பத்தின் சுருக்கம்)

குபேரனின் மகன்களான நளகூவரனும் மணிக்ரீவனும் வளமான வாழ்வை அனுபவித்து வந்தனர். ஒருமுறை அழகிய பெண்களுடன் குடிபோதையில் மூழ்கியிருந்த அவர்கள் இருவரும் மந்தாகினி




கங்கையில் ஆடைகள் ஏதுமின்றி லயித்திருந்தனர். அப்போது அப்பக்கமாகச் சென்ற நாரதரைக் கண்ட பெண்கள், தங்களது உடலை மறைத்துக்கொள்ள, இவ்விருவரும் நாரதரைக் கண்டுகொள்ளவில்லை. அவர்களின் மீது கருணை கொண்ட நாரதர், அவர்கள் மரமாகப் பிறப்பர் என்று சாபம் வழங்கினார்; அதே சமயத்தில் தேவர்களின் கணக்கில் நூறு வருடங்கள் மரமாக வாழ்ந்த பின்னர், அவர்கள் புருஷோத்தமரான முழுமுதற் கடவுள் கிருஷ்ணரை நேருக்கு நேர் சந்திப்பர் என்ற வரத்தையும் நல்கியிருந்தார்.

தம் பெரும் பக்தரான நாரதரின் வாக்கைக் காப்பாற்றுவதற்காக உரலில் பிணைக்கப்பட்டிருந்த குழந்தை கிருஷ்ணர், அவ்விரு மரங்களின் இடைவெளியில் புகுந்து சென்றார். கனமான மர உரல் மரங்களின் மீது பட்டு நின்றது. உரலில் தம் உடலோடு கட்டப்பட்டிருந்த கயிற்றை கிருஷ்ணர் பலமாக இழுத்தபோது, அவ்விரு மரங்களும் கிளை கொம்புகளுடன் கீழே விழுந்து பெருத்த ஓசையை எழுப்பின. அம்மரங்களிலிருந்து மிகுந்த பிரகாசத்துடன் வெளிப்பட்ட குபேரனின் மைந்தர்கள் கிருஷ்ணருக்கு பிரார்த்தனைகளைச் செலுத்தி விடைபெற்றனர்.




# ஸ்ரீ கிருஷ்ண தரிசனம்

65 ஆண்டு கால பாரம்பரியமிக்க
Back to Godhead
பத்திரிகையின் தமிழ் பதிப்பு, தற்போது
**உங்கள் இல்லம் தேடி!**



## நீங்களும் சந்தாதாரராக மாற...

தங்களுக்கு அருகில் இருக்கும் இஸ்கான் கோவிலை உடனடியாக அணுகுங்கள். தங்களது இருப்பிடத்திற்கு அருகில் இஸ்கான் கோவில் இல்லையெனில், சந்தாவிற்குரிய தொகையை வரைவோலை (Demand Draft [DD]) மூலமாக "Bhaktivedanta Book Trust" என்னும் பெயரில், தங்களது முழு முகவரியுடன் அனுப்பி வைக்கவும். At par காசோலைகள் (cheque) ஏற்கப்படும். ஆனால் வெளியூர் காசோலைகள் ஏற்கப்பட மாட்டாது. சந்தா தொகை: ஒரு வருடம் ரூ. 160; இரண்டு வருடம் ரூ. 300; ஐந்து வருடம் ரூ. 700.

அனுப்ப வேண்டிய முகவரி: ஸ்ரீ கிருஷ்ண தரிசனம், 7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: (044) 25514553, 98948 14553

ஸ்ரீ கிருஷ்ண தரிசனம் படியுங்கள்! ஸ்ரீ கிருஷ்ணரின் தரிசனத்தை அடையுங்கள்!

# ஸ்ரீபாத மத்வாசாரியர்

வைஷ்ணவ ஆச்சாரியர்களில் தலைசிறந்து விளங்கியோரில் ஒருவர் ஸ்ரீபாத மத்வாசாரியர். 13ஆம் நூற்றாண்டைச் சார்ந்த இவர், துவைதம் என்று பிரபலமாக அறியப்படும் தத்துவவாதக் கொள்கையை நிலைநாட்டி பக்தியைப் பரப்பியவர். ஹனுமான், பீமன் ஆகியோரின் வரிசையில் வாயுவின் மூன்றாவது அவதாரமாக இவர் அறியப்படுகிறார்.

வழங்கியவர்: விக்ரம கோவிந்த தாஸ்

## குழந்தைப் பருவம்

நாராயணபட்டர், வேதவதி தம்பதியினர் பகவான் விஷ்ணுவிடம் அர்ப்பணித்த 12 வருட பிரார்த்தனையின் பலனாக, ஸ்ரீ பாத மத்வாசாரியர் கி.பி. 1238ஆம் ஆண்டு விஜயதசமி அன்று உடுப்பிக்கு அருகிலுள்ள பாஜக என்னும் கிராமத்தில் அத்தம்பதியினரின் மகனாக அவதரித்தார். தனது சிறு வயதில் தனது தந்தையின் கடனைத் தீர்ப்பதற்காக, புளியங்கொட்டையை தங்க நாணயங்களாக்கினார். தனது ஐந்தாம் வயதில் தனது வீட்டுக்கு அருகில் பாம்பு உருவில் இருந்த மணிமான் என்ற அசுரனை கால் கட்டை விரலினால் அழித்தார். அதே வயதில் பூணூல் தரித்த அவர் சிறுவயதிலேயே சாஸ்திர அறிவில் ஒப்பில்லாதவராகத் திகழ்ந்தார்.

## கல்வி, சந்நியாசம்

தனது பன்னிரண்டாம் வயதில் அச்சுத பிரகாசர் என்பவரின் குருகுலப் பள்ளியில்



இணைந்தார். பூர்ணபிரக்ஞர் என்ற நாமத்துடன் சந்நியாசம் ஸ்வீகரித்தார். சில காலம் பல ஆச்சாரியர்களின் வேதாந்த பாஷ்யத்தை கவனமாகப் படித்தார். அப்போது வேதாந்தத்திற்கான அத்வைத விளக்கத்தின் உபயோகமற்ற தன்மையை நன்கு உணர்ந்த அவருக்கு, தூய உண்மையான விளக்கத்தை வேதாந்தத்திற்கு வழங்க வேண்டும் என்ற ஆவல் எழுந்தது. (பின்னர், அவர் துவைத வாத விளக்கத்தை அளித்தார் என்பது குறிப்பிடத்தக்கது) சந்நியாசம் எடுத்த 40 நாட்களிலேயே, தர்க்கத்தில் புகழ் பெற்ற வாசுதேவ பண்டிதரை வாதத்தில் வென்றார். அவரின் மேலான அறிவை உணர்ந்த அச்சுத பிரகாசர், மடத்தின் தலைமைப் பொறுப்பை அனந்த தீர்த்தர் என்ற திருநாமத்தோடு ஏற்க அவரைப் பணித்தார்.

### ஸ்ரீபாத மத்வாசாரியரின் அதிசயத்தக்க உடல் வலிமை

மத்வாசாரியர் இயற்கையிலேயே தலைமைப் பண்புடையவராகவும், புத்தி, நல்லொழுக்கம், ஆன்மீக கலாசாரம் மட்டுமல்லாது உடல் வலிமையும் நன்றாக பெற்றவராக இருந்தார். மல்யுத்தம், நீச்சல், மலையேற்றம் ஆகியவற்றில் கலந்து கொண்டார். பரசுராமரின் வம்சத்தின் வழியே வந்த பிராமண குலத்தில் பிறந்தவர் என்பதால், நல்ல உயரமும் உடல் பலமும் பெற்றவராக இருந்தார்.

அவர் ஒருமுறை யாத்திரை சென்றபோது, அவரது சிஷ்யரான சத்ய தீர்த்தரை பயங்கரமான வங்காளப் புலி ஒன்று தாக்கியபோது, தீரத்தோடு அப்புலியை எதிர்த்த மத்வாசாரியர் அதனை ஓடச் செய்தார்.

மற்றொரு புண்ணிய யாத்திரையின் போது கொள்ளைக்கார கும்பல் ஒன்றினை எதிர்த்து அவர்களையும் ஓடச் செய்தார்.

காதான்சரி என்ற முப்பது பேர் பலம் கொண்ட ஒருவன், ஒரு முறை மத்வாசாரியருக்கு சவால் விட்டபோது, தமது கால் பெருவிரலை தரையில் ஊன்றிய ஆச்சாரியர், “இதை அசைத்தால் போதும்” என்று கூற, காதான்சரி அதைச் செய்ய இயலாமல் தோற்று ஓடினார்.

## யாத்திரைகள்

அவர் தனது விளக்கங்களைப் பரப்புவதற்காக பாரதம் முழுவதும் யாத்திரை மேற்கொண்டார். உடுப்பி யிலிருந்து கன்னியாகுமரி சென்று அங்கிருந்து இராமேஸ்வரம், ஸ்ரீரங்கம் உட்பட பற்பல புண்ணியத் தலங்களுக்குச் சென்றார். அவ்வாறு சென்றபோது தனது விளக்கங்களை ஒரு நூலாக்கி வேதாந்த சூத்திரத்திற்கு ஒரு பாஷ்யம் எழுத உறுதி பூண்டார். அதற்கு வேதாந்த சூத்திரத்தை அருளிய வியாசரிடம் இருந்தே ஆசீர்வாதம் பெற வட இந்திய யாத்திரையைத் தொடங்கினார்.

வியாசதேவர் சாதாரண மக்களுக்குப் புலப்படாத வண்ணம் தனது ஆஸ்ரமமாகிய பத்ரிகாஷ்ரமத்தில் வசித்து வருகிறார். நீண்ட கால நடைப் பயணத்திற்கு பிறகு மத்வாசாரியர் பத்ரிநாத் வந்தடைந்தார். அங்கு ஒரு மண்டலம் (ஏழு வார காலம்) விரதம் மேற்கொண்டு, பக்தியோடு பிரார்த்தித்தார். உள்ளுணர்வினால் உந்தப்பட்டு மேலும்



வியாசதேவரை மத்வர் சந்தித்த காட்சி

## அக்டோபர் 17, மத்வாசாரியர் தோன்றிய நாள்

உயரத்தில் இருக்கும் பத்ரிகாஸ்ரமத்திற்குச் சென்று வியாசதேவரை அவர் சந்தித்தார். வியாசரிடம் தன்னுடைய பகவத் கீதையின் வியாக்கியானத்தை காட்டி அங்கீகாரம் பெற்றார். மேலும், வேதாந்த சூத்திரத்திற்கு விளக்கம் எழுத ஆசியும் பெற்றார். வியாசதேவரை நேரடியாக சந்தித்துப் பேசியதால் சாஸ்திரங்களில் பொதிந்து இருக்கும் உண்மையான அர்த்தத்தை மேலும் நன்றாக உணர்ந்து, வேதாந்தத்திற்கு தனது விளக்கத்தை எழுதினார். பின்னர் பத்ரிநாத்திலிருந்து திரும்பி பீகார், வங்காளம், ஒரிசா, ஆந்திரா வழியாக உடுப்பி திரும்பினார்.

### உடுப்பி கிருஷ்ணர்

உடுப்பியில் வசித்தபோது அருகிலுள்ள (மால்பே கடற்கரையில்) சமுத்திரத்தில் ஸ்நானம் செய்யும் பழக்கம் அவருக்கு இருந்தது. ஒருநாள் ஸ்ரீ கிருஷ்ணரை தியானித்தபடி கடற்கரையில் அவர் இருந்தபோது, துவாரகையிலிருந்து வந்த ஒரு கப்பல், மணல் திட்டுகளில் சிக்கிக் கொண்டதைக் கண்டு, அது பாதுகாப்பாக கரை சேருவதற்கு வழிகாட்டினார். கப்பல் தலைவன் அவருக்குப் பரிசு வழங்க முன்வந்த போது, கப்பலில் இருந்த இரு பெரிய கோபிசந்தன (திலகம் அணிவதற்கும் பூஜைகளுக்கும் பக்தர்களால் பயன்படுத்தப்படும் ஒரு வகை மண்) பாறைகளைக் கேட்டுப் பெற்றார். அப்பாறை ஒன்றினுள் இருந்த பலராமரின் விக்ரஹத்தை கடற்கரையின் அருகிலேயே பிரதிஷ்டை செய்தார். (அத்திருக்கோவில் வடபந்தேஸ்வரர் திருக்கோவில் என்று அறியப்படுகிறது.) மற்றொரு பாறையினுள் ஓர் அழகான கிருஷ்ணரின் விக்ரஹம் இருந்தது. கிருஷ்ணரின் கருணையாக அதனை ஏற்று, அழகான பாடல்களில் கிருஷ்ணரைப் புகழ்ந்து பாடினார். அந்த விக்ரஹத்தை உடுப்பியில் பிரதிஷ்டை செய்து, வழிபாட்டு முறையையும் நடத்தை விதிகளையும் உண்டாக்கினார்.

### சீடர்கள்

பின்னர் இரண்டாம் முறையாக வட இந்திய யாத்திரை மேற்கொண்டு பத்ரிகாஷ்ரமத்திற்குச் சென்றார். மேலும், தில்லி, குருக்ஷேத்திரம், காசி, கோவா போன்ற இடங்களுக்கும் சென்ற அவர், அவ்வழிகளில் பலரையும் வாதத்தில் வென்று தனது சிஷ்யர்களாக்கிக் கொண்டார். பற்பல சிறந்த பண்டிதர்களுக்கும் சந்நியாசம் வழங்கினார். தனது கொள்கைகளைப் பிரச்சாரம் செய்ய அவர்களைப் பணித்தார். பத்மநாப தீர்த்தர், நரஹரி தீர்த்தர், மத்வ தீர்த்தர், ஆக்ஷோப்ய தீர்த்தர் போன்றோர் அவர்களில் குறிப்பிட்டுச் சொல்லத்தக்கவர்கள்.

### ஸ்ரீபாத மத்வாசாரியரின் உபதேசங்கள்

1. ஹரி என்று அறியப்படும் பகவான் விஷ்ணுவே முழுமுதற் கடவுள்.
2. அவரை சாஸ்திரங்களின் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.
3. பௌதீக உலகம் உண்மையானது.
4. ஜீவாத்மாக்கள் பகவான் விஷ்ணுவிலிருந்து வேறுபட்டவர்கள்.
5. ஜீவாத்மாவின் இயற்கை பகவானின் சேவகனாக இருப்பதுவே.
6. முக்தி பெற்ற நிலை, மாயைக்கு உட்பட்ட நிலை ஆகிய இரண்டு நிலைகளிலுமே ஜீவன்களுக்கு மத்தியில் ஏற்றத் தாழ்வுகள் உண்டு.
7. முக்தி என்பது பகவான் விஷ்ணுவின் தாமரைத் திருவடிகளை அடைவதே; அருவப் பிரம்மனில் கலப்பது அல்ல.
8. தூய பக்தித் தொண்டினால் அந்த முக்தி சாத்தியமாகும்.
9. பிரத்யக்ஷம், அனுமானம், சாஸ்திரங்கள் ஆகிய மூன்றும் அறிவைப் பெறுவதற்கான வழிமுறைகள்.

ஸ்ரீபாத மத்வாசாரியரின் மேற்கூறிய அடிப்படைக் கோட்பாடுகள் ஸ்ரீ சைதன்ய மஹாபிரபுவால் ஏற்கப்பட்டது. இதை பலதேவ வித்யாபூஷனர் தனது ப்ரமேய ரத்னாவளியில் உறுதி செய்கிறார்.





## ஸ்ரீபாத மத்வாசாரியர் பற்றிய சில தகவல்கள்

**பிறந்த நாள்:** புரட்டாசி மாதம் விஜயதசமி; கி.பி.1238, 4339 கலியுகம்

**பிறந்த இடம்:** உடுப்பியில் இருந்து 8 கி.மீ தொலைவில் உள்ள பாஜக க்ஷேத்திரம்

**பெற்றோர்:** நாராயண பட்டர், வேதவதி

**பெற்றோர் இட்ட பெயர்:** வாசுதேவர்

**சந்நியாச நாமம்:** தனது 11 வயதில் பூர்ண பிரக்ஞர் என்ற திருநாமத்துடன் சந்நியாசம் எடுத்தார்

**உபதேசித்தது:** தத்துவவாதம் (துவைதம்)

**ஸ்தாபித்தது:** உடுப்பியில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் விக்ரஹத்தை ஸ்தாபித்தார்.

**அருளிய பாஷ்யம்:** வேதாந்த சூத்திரத்திற்கு பூர்ண பிரக்ஞ பாஷ்யம் என்ற தனது வியாக்கியானத்தை அளித்தார். மேலும் பகவத் கீதை, உபநிஷத்துகள் போன்றவற்றிற்கு தனது விளக்கத்தை அளித்து, பல பக்திப் பாடல்களையும் இயற்றினார்.

## நூல்கள்

ஸ்ரீபாத மத்வாசாரியர் பகவத் கீதை, பாகவதம் மற்றும் பல உபநிஷத்துகளுக்கும் வியாக்கியானம் அளித்துள்ளார். மேலும் நியாய விவரண, கர்மநிர்ணய, கிருஷ்ணாம்ருத மஹார்ணவ போன்ற பல புத்தகங்களை எழுதினார். பற்பல பக்திப் பாடல்களையும் இயற்றினார். இறுதியாக ஐத்ரேய உபநிஷத்துக்கு விளக்கம் எழுதிய பிறகு, மடத்தின் பொறுப்புகளைத் தனது சீடர்களிடம் ஒப்படைத்துவிட்டு, தனது எழுபத்தி ஒன்பதாம் வருட முடிவில், கி.பி.1317ஆம் ஆண்டு மார்கழி மாதம் வளர்பிறை நவமியில் பத்ரிகாஸ்ரமத்திற்கு தனது யாத்திரையைத் தனியாகத் தொடங்கினார். அதன் பின்னர் அவர் உடுப்பிக்குத் திரும்பவில்லை. அத்திருநாள், மத்வ நவமியாக இன்றும் பெரும் சிறப்பாக உடுப்பியில் கொண்டாடப்படுகின்றது.


விக்ரம கோவிந்த தாஸ், B.E. அவர்கள் கடந்த 20 வருடங்களாக கிருஷ்ண பக்தியில் முழு நேரமாக ஈடுபட்டுள்ளார். தற்போது நாகர்கோவில் இஸ்கான் கிளையில் நிர்வாகப் பொறுப்பு வகித்து வருகிறார்.

**மேலே:** மத்வரால் பிரதிஷ்டை செய்யப்பட்ட உடுப்பி கிருஷ்ணர்

**அதற்கும் மேலே:** மத்வர் அவதரித்த வீடு




**இறை விஞ்ஞானத்தை உணர்வதும் தேவையற்ற வாழ்க்கைப் போராட்டத்திலிருந்து விடுபடுவதும் உண்மையான விருப்பமுடையவர்களுக்கு கடினமல்ல. ஆனால் சரணடையாமல் உபயோகமற்ற கற்பனையில் ஈடுபடும் நபர்களுக்கு அவை மிகவும் கடினமானவை. (ஸ்ரீமத் பாகவதம் 2.7.47, பொருளுரையிலிருந்து)**




**எல்லாச் சூழ்நிலைகளிலும் இறைவனின் மீதான அன்பை வளர்க்க ஒருவன் முயற்சி செய்ய வேண்டும். அஃது எல்லாவித பிரச்சனைகளையும் தீர்த்துவிடும். (ஸ்ரீமத் பாகவதம் 3.9.42)**




**கருத்து:** ஆன்மீக வாழ்வை பயிற்சி செய்து பிறவிப் பெருங்கடலைக் கடக்க முயற்சி செய்பவர்கள், ஜடவுலக ஆசைகள் என்னும் நங்கூரத்திலிருந்து தங்களை விடுவித்துக் கொள்ள வேண்டும். அதன் பின்பு மட்டுமே ஆன்மீக முன்னேற்றம் தொடங்கும்.

# பிரபுபாதர் நூற்றந்தாதி

பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் திருநாமத்தினை உலகெங்கிலும் பரப்பி ஆன்மீக உலகில் புரட்சியை ஏற்படுத்திய ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்து, அவரது வாழ்க்கை வரலாற்றை விளக்கும் வண்ணம் எழுதப்பட்டதே இந்த ''பிரபுபாதர் நூற்றந்தாதி''. எளிய தமிழில் இயற்றப்பட்டுள்ள இந்த குற்றமற்ற வெண்பாக்கள் வானில் மிதந்து மேவிவரும் பொருட்டு இங்கு இதனை தொடர்ந்து பிரசுரித்துக் கொண்டுள்ளோம். முதல் செய்யுளின் இறுதியை அடுத்த செய்யுளின் ஆரம்பமாகக் கொண்டு அழகிய அந்தாதியின் வடிவிலுள்ள இந்த 108 வெண்பாக்கள் மக்களின் கருவில் புகுந்து மாபெரும் பக்தரான ஸ்ரீல பிரபுபாதரின் பொன் கருத்துக்கள் அவர்களின் நெஞ்சங்களில் நிற்பதற்கான தகுந்த இடத்தை ஏற்படுத்துவது உறுதி.

**வழங்கியவர்: தயாள் கோவிந்த தாஸ்**

## பகுதி 2

**என்றும் இளைக்காது ஏற்ற குருமொழிகள்**
**நன்றாய் இதயத்துள் நட்டிருக்க– அன்று**
**அலகாபாத் கௌடிய ஆன்ற மடத்தின்**
**நலம்காத்து நின்றார் நயந்து. (13)**

என்றும் சோர்வடையாது, தன் குருவிடமிருந்து பெற்ற கட்டளைகள் இதயத்துள் நன்றாக நிலைத்திருக்க, அலகாபாத்தில் அமைந்த கௌடிய மடத்தின் கிளைக்கு உதவியாக இருந்து, அதன் நலத்திற்காகப் பெரிதும் பாடுபட்டார்.

**நயந்து வியாபாரம் நன்கு வளர**
**முயன்றார் முனைந்துமும் பையில்– முயன்று**
**வளர்த்தும் முடிவில் வளமின்றி மூடி**
**அளந்தான் அருளென்றார் அன்று. (14)**

மருந்து வியாபாரம் நன்கு வளர்வதற்காக மும்பை நகரம் சென்று முயற்சி செய்தார். முயன்றும் வியாபாரம் வளம் குன்றிவிட அதை மூடிவிட்டார். இது மூவுலகங்களையும் அளந்தவனாகிய பகவானின் அருள் என்று ஏற்றுக் கொண்டார்.

**அன்றுஓர் நாற்பதும் ஈரும் நடந்திட**
**நன்று குடும்பம் நலம்பெற– இன்புற்று**
**வாழ்ந்திருந்த கோல்கத்தா வந்தடைந்தார், காட்டினார்**
**வாழ்விற் குருவுக்காய் வாழ்ந்து. (15)**

அந்த சமயத்தில் அவருக்கு நாற்பத்து இரண்டு வயது நடந்து கொண்டிருந்தது. தன்னுடைய குடும்பத்தின் நலன் காக்கத் தான் இளமைக் காலத்தில் மகிழ்ச்சியாக வாழ்ந்திருந்த கோல்கத்தா நகரம் வந்தடைந்தார். பின் தன் வாழ்வைக் குருவின் கட்டளைகளை நிறைவேற்றுவதற்காக வாழ்ந்தார்.

**வாழ மருந்து வழிகட் துணைக்கொண்டு**
**வீழற் தவிர்க்க விழைந்தார்– வாழ**
**வழிசொன்னார் ஆங்கிலத்தில் வண்ண இதழால்,**
**மொழிசெய்தார் ஆர்வம் மிகுந்து. (16)**

தன் வாழ்விற்காக மீண்டும் மருந்து வியாபாரத்தை மேற்கொண்டார். உலக மக்கள் கண்ணன் உணர்வு பெற்று வாழ்வதற்காக கி.பி. 1944இல் ஆங்கிலத்தில் பத்திரிகை ஒன்றை ஆரம்பித்தார். மிகுந்த ஆர்வத்துடன் கட்டுரைகள் எழுதினார். இதன் மூலம் மக்கள் கீழ்நிலைக்கு விழா வண்ணம் பெரும் உபாயம் செய்தார்.

**மிகுந்தமொழி பேரொளியுள் மீண்டும் மனிதர்**
**புகுந்திட வைக்கும் புகழ்வோம்– மிகுந்து**
**குருவாய் மொழிகள் குறியாய் நிறைசெய்**
**தருவாய் அறிந்த தவம். (17)**

பிரபுபாதரின் கட்டுரைகள் மனிதர் மீண்டும் இறைவனின் பேரொளியுள் புகுந்து, அறியாமையை விலக்க உதவும். இதைப் புகழ்வோம். தன் குருவினுடைய விருப்பத்தை நிறைவு செய்யும் வகையில் குறியாய் இருந்து, தகுந்த சமயத்தில் பத்திரிகை ஆரம்பித்தது சரியான தவம்.



தேநீர் கடைகள் உட்பட, மக்கள் கூடும் அனைத்து இடங்களுக்கும் சென்று பத்திரிகை விற்ற காட்சி

தவத்தில் உயர்ந்த தவம்நம் அபயர்
தவத்தை உணரும் தவமே– தவத்தால்
அபயம் விளையும் அறிவோம் அதனால்
அபயர் அளிக்கும் தவம். (18)

தவத்தில் உயர்ந்தது பிரபுபாதர் அவர்களின் தவத்தை உணர்கின்ற தவம் ஆகும். அத்தகைய தவத்தால் பயம் நீங்கும். அதனால் பிரபுபாதர் அளிக்கும் தவத்தை அறிந்து ஏற்போமாக. அத்தகைய தவமானது கண்ணனின் பெயரைச் சொல்வதுதான்.

தவங்கையிற் தங்கத் தொழிற்கையில் இல்லை
அவருக்கு ஐம்பத்து ஆறில்– அவர்தம்
திருநாட்டுச் சான்சியிற் தோற்றுவாய் செய்தார்
கிருட்டிணன் பேரியக்கம் காண். (19)

ஐம்பத்தாறு வயது ஆகும்பொழுது பிரபுபாதர் கையில் தவம் தான் தங்கியது, தொழில் நீங்கியது. அந்தத் தருணத்தில் பிரபுபாதர் அவர்கள் இந்தியாவில் ஜான்சி நகரில் முதன்முதலில் கிருட்டிணன் பெயரில் இயக்கம் ஆரம்பித்தார்.

காணும் இயக்கமும் கைகூடா நின்றது
வேணுகைக் கொண்டானின் வேலையோ– காணும்தன்
இல்லாள் இராதாவின் ஏற்காத போக்கினால்
வல்லார் விலக்கினார் வீடு. (20)

பிரபுபாதர் ஜான்சியில் ஆரம்பித்த இயக்கமானது சரிவரச் செயல்படாமல் நின்றது கண்ணனுடைய வேலையாக இருக்கலாம். தன்னுடைய மனைவியான இராதாராணி பக்தித் தொண்டிற்கு ஒத்துழைக்காத காரணத்தினால் பிரபுபாதர் வீட்டை விட்டுப் பிரிந்தார்.

வீடு விலக்கி வெயிற்கருக்கத் தில்லியில்
நாடு நலம்பெற நல்லிதழை– நாடுவோர்
சொற்பமே ஆயினும், சோர்வின்றிச் சென்றலைந்து
கற்றிட வைத்தார் கசிந்து. (21)

வீட்டிலிருந்து விலகி, நாட்டு மக்களின் நலனுக்காக வெயிலில் கருகி, தான் ஆரம்பித்த பத்திரிகையை தில்லியில் விற்றார். விரும்பி ஏற்போர் சொற்பம் என்றாலும் தளராது மக்களை நாடிச் சென்று கற்க வைத்தார்.

கசிந்திருந்து கண்ணீர் கலியுலகில் மக்கள்
நிசியும் பகலுமாய் நின்று– பசியால்
வருந்தும் நிலைபோய், வளங்கள் பெருக்கும்
மருந்தை விதைத்தார் முயன்று. (22)

கலியுலகில் மக்கள் இரவும் பகலும் பசியால் வருந்தும் நிலைக்காகக் கண்ணீர் கசிந்தார். இவ்வுலகில் வந்து பிறந்து கடினப்படாமல் இருப்பதற்காக, வளம்பெரும் வாழ்வு பெறுவதற்காகக் கிருட்டிண பக்தி என்னும் மருந்தாகிய விதையை மக்கள் இதயத்தில் விதைத்தார்.



*அபய் ஜான்சியில் பிரச்சாரம் செய்த காட்சி*

முயன்றுநற் பாகவத மூலம் பயின்றார்
அயராது அல்லும் பகலும்– நயந்து
மொழிபெயர்த்தார் ஆங்கிலத்தை மேவினோர் கற்க
அழியாத சொத்தென் றறிந்து. (23)

இரவும் பகலும் அயராது பாகவதத்தின் மூலத்தைப் பயின்றார். ஆங்கிலம் அறிந்தவர்கள் பயன்பெறும் வகையில், பாகவதம் அழியாத சொத்தென்று அறிந்து அதனை மொழிபெயர்த்தார். இது பிரபுபாதர் மிகவும் விரும்பிச் செய்த காரியம் ஆகும்.

அறிந்ததனா லன்பரை அன்பினா லேத்த
முறிந்தவென்கை கொண்டு முயன்றேன்– செறிந்த
பொருட்கொண்டு போற்றிலன், புண்ணியமாய் ஏற்பீர்
அருட்செய்யும் அன்பர்மீ தென்று. (24)

பிரபுபாதர் அவர்களின் பெரும் கருணையை அறிந்ததால் அன்பால் அவரைப் புகழ முயன்றேன். என்னுடைய கை முறிந்த கை. அப்படியிருக்க எப்படி நன்றாக எழுத முடியும். நிறைந்த பொருள்கொண்டு போற்றாவிட்டாலும், அன்பால் அருள் செய்யும் பிரபுபாதர் அவர்களின் மீது சொல்லப்பட்டதால் புண்ணியமாக ஏற்றுக் கொள்வீர். (தொடரும்)

தயாள் கோவிந்த தாஸ் M.Tech., Ph.D அவர்கள், திருச்சியிலுள்ள அரசாங்கத் தொழிற்சாலையில் பொது மேலாளராகப் பணியாற்றிய வண்ணம் கிருஷ்ண பக்தியை கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாகப் பயிற்சி செய்து வருகிறார்.

# தங்களை இதுவரை ஏமாற்றிய போலி குருவின்

# தவறுகள் அம்பலம்

**வழங்கியவர்:** அக்ரூரநாத தாஸ்

தலைவர்களையும் குருமார்களையும் திட்டித் தீர்ப்பது என்பது தற்போதைய உலகில் இணையத் தளங்களிலும் பத்திரிகைகளிலும் நடக்கும் பொதுவான சம்பவங்கள். அதன் அடிப்படையில் பல்வேறு பக்தர்கள் பாதிப்படைவதற்கு முன்பாக, மாபெரும் சக்திவாய்ந்த ஒரு குருவின் தவறுகளை அம்பலப்படுத்துவது இங்கு அவசியமாகத் தோன்றுகின்றது. இந்த போலி குருவினால் ஏமாற்றப்பட்டு, தங்கள் ஆன்மீக வாழ்வை இழந்து பல்வேறு நபர்கள் ஏற்கனவே பாவ வாழ்வின் பாதையில் சென்று கொண்டுள்ளனர். இருப்பினும், நம்மில் பெரும்பாலானோர் அவனது மோசமான விளைவுகளைக் கவனிக்காமல் அமைதியாக நின்று கொண்டுள்ளோம். மற்றவர்களின் தவறுகளைச் சுட்டிக் காட்டுவதை வலியுறுத்திய ஸ்ரீல பிரபுபாதரின் இயக்கத்தைச் சேர்ந்த யாம், அந்த போலி குருவின் தவறுகளை இங்கு வெளிச்சமிட்டு காட்டுகின்றோம்.

நான் பேசிக் கொண்டிருக்கும் போலி 'குரு' வேறு யாருமல்ல; ஜட ஆசைகளில் மூழ்கி கட்டுக்கடங்காது இருக்கும் நம் ஒவ்வொருவரின் மனமே அந்த போலி குரு. நம்முடைய பக்தித் தொண்டை கைவிட்டு புலனின்பத்தில் மீண்டும் ஈடுபடும்படி அந்த போலி குரு நம்மை தொடர்ந்து வற்புறுத்தி வருகின்றான். புத்திசாலியான அவன் நயவஞ்சகத் தன்மையுடையவன்; நமது நலனில் முழு அக்கறை உடையவனைப் போல நடிக்கக் கூடியவன்; மேலும், நமக்குத் தெரியாமலேயே நம்மைத் தவறான வழியில் அழைத்துச் செல்லக்கூடியவன். அவனது பழிவாங்கும் நடவடிக்கைகள் நம் அனைவரையும் அச்சமூட்டக்கூடியதாகும்.

அவனை ஒதுக்கி வைப்பதோ, இழிவாகக் கருதுவதோ, முற்றிலும் அழித்துவிடுவதோ சாத்தியமல்ல. அவ்வாறு நாம் முயற்சி செய்தால், அஃது அவனை மேலும் தூண்டிவிட்டு, அவனது சக்தியை அதிகப்படுத்திவிடும். அவனுக்கும் நமக்கும் நீண்ட காலத்து நெருங்கிய உறவு உள்ளது, அவனின்றி நம்மால் எதையும் செய்ய முடியாது என்பது உண்மையே. மனதின் செயல்களை முற்றிலுமாக நிறுத்திவிட முயற்சி செய்வது என்பது பலனற்ற முயற்சியாகும்.

அவனைத் திருத்தி, தீய செயல்களில் ஈடுபடாமல் நற்செயல்களில் ஈடுபடச் செய்வதே நமது கடமையாகும். இதைச் செய்வதற்கான மிகச்சிறந்த வழிமுறை ஹரே கிருஷ்ண, ஹரே கிருஷ்ண, கிருஷ்ண கிருஷ்ண, ஹரே ஹரே/ ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே என்னும் மஹாமந்திரத்தை ஜபிப்பதில் அவனை தினமும் ஈடுபடுத்துவதே. அவ்வாறு ஜபம் செய்யும்போது, அவனது அபத்தமான எண்ணங்கள் குறுக்கிடலாம், ஆனால் அத்தகு எண்ணங்களுக்கு இடமில்லை என்பதை அவனிடம் நாம் தெளிவாகச் சொல்லிவிட வேண்டும். ஜபம் செய்தல் என்னும் நமது முக்கியமான சேவையில் தொந்தரவு செய்து தனது மோசமானச் செயல்களை மீண்டும் ஆரம்பிக்க நாம் அவனுக்கு இடமளிக்கக் கூடாது.

நாம் அவ்வாறே தொடர்ந்து ஸ்திரமாக அவனைக் கட்டுப்படுத்தி வந்தால், காலப்போக்கில் அவன் திருந்திவிடுவான். மிகவும் சக்தி வாய்ந்த அபாயகரமான எதிரியான அவன், நமது மிகச்சிறந்த நண்பனாக மாறிவிடுவான். தடையின்றி கிருஷ்ணரை நினைவுகொள்வதற்கும் புகழ்வதற்கும் அவன் நமக்குச் சிறந்த உதவியாளனாக இருப்பான். "மனதை வென்றவனுக்கு மனமே சிறந்த நண்பனாகும்; ஆனால் அவ்வாறு செய்யத் தவறுபவனுக்கோ, அதுவே மிகப்பெரிய விரோதியாகும்." (பகவத் கீதை 6.6)

*அக்ரூரநாத தாஸ், ஸ்ரீல பிரபுபாதரின் சீடரான இவர் சுமார் 35 வருடங்களுக்கு மேலாக, அமெரிக்காவில் வாழ்ந்த வண்ணம் கிருஷ்ண பக்தியை பயிற்சி செய்து வருகிறார்.*

## வாசகர் கருத்து

ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தில் வெளிவரும் ஒவ்வொரு கட்டுரையும் அற்புதம். *பக்தி என்பது கிருஷ்ணருக்கு மட்டுமே* என்ற ஸ்ரீல பிரபுபாதரின் உரை மிகவும் தெளிவாக, எளிதில் புரியும்படி இருந்தது. தவத்திரு. பக்தி விகாஸ ஸ்வாமி அவர்களின் *பசுத்தோல் போர்த்திய புலிகள்*, உண்மையையும் போலியையும் உணர்ந்துகொள்ளப் பேருதவியாக அமைந்தது. *கோவில் கட்டுவது ஏன்* என்பதற்கான அவரது உரையில், தூய பக்தி இன்றி கலப்படமான பக்தியில் கோவிலிலுள்ள பக்தர்கள் ஈடுபட்டால், அக்கோவில் இடிக்கப்பட வேண்டும் என்ற அவரது கருத்து பாராட்டத்தக்கதாக உள்ளது. பண்பாட்டின் முக்கியத்துவத்தை உணர்த்திய *தமிழ் மொழியும் தமிழ் பண்பாடும்* என்ற கட்டுரை மக்களைச் சிந்திக்க வைப்பது நிச்சயம். மொத்தத்தில், அனைத்து கட்டுரைகளுமே மிகவும் உதவியாக இருப்பதால், ஆர்வத்துடன் ஒவ்வொரு இதழையும் எதிர்பார்த்து படித்து வருகிறோம். இவ்விதழ்கள் வெளிவருவதற்குக் காரணமாக இருக்கும் அனைத்து பக்தர்களுக்கும் எங்களது ஆத்மார்த்தமான நன்றி. இவ்விதழின் திருப்பணியில் பற்பல பெண் பக்தர்களும் பங்குபெற்று மொழிபெயர்ப்பு செய்வதும் கட்டுரை எழுதுவதும் திருப்தியளிக்கின்றது. இவ்விதழ் மேலும் சிறப்பு பெற நாங்கள் பகவான் கிருஷ்ணரை பிரார்த்திக்கின்றோம்.

—திருமதி. பிரபாகரன், சுவிட்சர்லாந்து

# கார்த்திக் மாதமும் தாமோதர பூஜையும்

வழங்கியவர்: ஸ்ரீ கிரிதாரி தாஸ்

தமிழில் சித்திரை, வைகாசி என்று மாதங்கள் இருப்பதைப் போன்று, சமஸ்கிருதத்திலும் மாதங்கள் உண்டு. அவற்றில் மிகவும் விசேஷமானதாக கருதப்படுவது கார்த்திக் மாதம் (தமிழில் வரும் கார்த்திகை மாதத்துடன் குழப்பிக் கொள்ளக் கூடாது). சிறப்பு மிக்க கார்த்திக் மாதம், இந்த ஆண்டு அக்டோபர் 22ஆம் தேதியிலிருந்து நவம்பர் 20ஆம் தேதி வரை அனுஷ்டிக்கப்படுகிறது.

## கார்த்திக் மாத மகிமைகளில் சில

கார்த்திக் மாதத்தில் மேற்கொள்ளப்படும் விரதங்கள் அதிக பலனைக் கொடுக்கக்கூடியவை; தூய்மைப்படுத்தும் விரதங்களில் அவை தலைசிறந்ததாகக் கருதப்படுகின்றன. பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு கார்த்திக் மாதம் மிகவும் பிரியமானதாகும். மாதங்களில், பகவான் கிருஷ்ணர் மார்கஷீர்ஷ மாதமாகத் திகழ்வதைப் போல, ஸ்ரீமதி ராதாராணி அதற்கு முந்தைய மாதமான கார்த்திக் மாதமாகத் திகழ்கிறார். இது ராதாராணியின் மாதம் என்பதால், கிருஷ்ணருக்கு மிகவும் பிரியமானதாகும்.

கார்த்திக் விரதத்தை அனுஷ்டிப்பதன் மூலம் எல்லாப் பாவங்களும் இதயத் திலிருந்து ஓடிவிடும். மற்ற விரதங்களை நூறு முறை அனுஷ்டிப்பதால் வரும் பலன், கார்த்திக் விரதத்தை ஒருமுறை அனுஷ்டிப்பதால் அடையப்படும். கார்த்திக் விரதத்தை முறையாகப் பின்பற்றினால், மந்திரங்களை உச்சரிப்பது, தீர்த்த யாத்திரை செல்வது போன்றவற்றைக் காட்டிலும் இலட்சக்கணக்கான மடங்கு அதிகப் பலனை அடையலாம். இம்மாதத்தில் விருந்தாவனத்தில் தாமோதரரை வழிபடுவோர் எளிதில் கிருஷ்ண பக்தியை அடைய முடியும். கார்த்திக் மாதத்தில் கிருஷ்ணரை விருந்தாவனத்தில் வழிபட்ட துருவ மஹாராஜர் அவரது தரிசனத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. (ஸ்ரீல சநாதன கோஸ்வாமி அவர்கள் அருளிய ஹரி பக்தி விலாஸ் புத்தகத்திலிருந்து)

## விருந்தாவனத்தில் கார்த்திக் மாதம்

கார்த்திக் மாதம் முழுவதையும் (குறைந்தபட்சம் சில நாட்களாவது) விருந்தாவனத்தில் கழிப்பது மிகவும் சிறந்ததாகும். உலகிலுள்ள பக்தர்கள் அனைவரும் கார்த்திக் மாதத்தின் போது விருந்தாவனத்திற்கு வந்து பலன் பெற வேண்டும் என்று ஸ்ரீல பிரபுபாதர் விரும்பினார். அதற்கேற்ப, ஒவ்வொரு வருடமும் கார்த்திக் மாதத்தின் போது இஸ்கான் சார்பில் பல்வேறு திருவிழாக்கள் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டு பக்தர்களுக்கு சத்சங்க வாய்ப்பு வழங்கப்படுகின்றது.

## தாமோதர பூஜை

கார்த்திக் மாத பூஜையில் மிகவும் முக்கியமானது என்னவெனில், பகவான் கிருஷ்ணரை தாமோதரரின் வடிவில், அதாவது அவரது வயிற்றை கயிற்றின் மூலம் உரலுடன் கட்டப்பட்ட வடிவில் வழிபடுவதாகும். இந்த வழிபாட்டினை விருந்தாவனத்தில் செய்வது சாலச் சிறந்தது என்றாலும், ஒவ்வொருவரும் அவரவரது வீட்டில் மாலைப் பொழுதில் இவ்வழிபாட்டினை எளிமையாக சிறப்புடன் செய்யலாம். உரலில் கட்டப்பட்ட கிருஷ்ணரின் படம் இஸ்கான் கோவில்களில் கிடைக்கும் (கோவிலுக்குச் செல்ல இயலாதோர்



விருந்தாவனத்திலுள்ள யமுனையின் எழில்மிகு தோற்றம்



நாகர்கோவிலுள்ள இஸ்கான் கோவிலில் தாமோதர பூஜைக்காக வடிவமைக்கப்பட்டுள்ள கிருஷ்ணரும் யசோதையும்

இப்பத்திரிகையின் அட்டைப்படத்தைக்கூட உபயோகிக்கலாம்). அப்படத்தை தாமோதர மாதம் முழுவதும் உங்களது பூஜையறையில் வைத்து பூஜிக்கவும். தினசரி மாலை வேளையில், இக்கட்டுரையுடன் வழங்கப்பட்டுள்ள தாமோதராஷ்டகம் என்னும் பாடலைப் பாடியபடி, மண் விளக்கில் நெய் கொண்டு தாமோதரருக்கு ஆரத்தி செய்ய வேண்டும். அனுஷ்டிக்க வேண்டிய இதர வழிமுறைகள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன.

## அனுஷ்டிக்கும் வழிமுறை

அதிகாலை பிரம்ம முகூர்த்த நேரத்தில் (சூரிய உதயத்திற்கு 1 ½ மணி நேரத்திற்கு முன்பு) எழுந்து குளித்த பிறகு, மங்கள ஆரத்தி செய்து அதன் பின்னர் ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை ஜபம் செய்ய வேண்டும்.

உயர்ந்த வைஷ்ணவர்களின் சங்கத்தில் தினமும் ஸ்ரீமத் பாகவதத்தைக் கேட்க முயற்சி செய்தல் நன்று. கார்த்திக் மாதத்தில் தினமும் ஸ்ரீமத் பாகவதத்தைப் படிப்பதன் மூலம் 18 புராணங்களையும் படித்த பலனை அடைய முடியும்.

ஜபம் செய்யும் போதும் கீர்த்தனத்தின் போதும் கிருஷ்ணரின் திருநாமத்தில் அதிக கவனம் செலுத்த வேண்டும். ஹரே கிருஷ்ண மஹாமந்திரத்தை அதிகமாக ஜபம் செய்வதும், குடும்பத்தினருடன் இணைந்து கீர்த்தனம் செய்வதும் சிறந்தது.

மாதம் முழுவதும் பிரம்மசரிய விரதம் கடைபிடித்தல் அவசியம்.

உங்களுக்குப் பிடித்தமான உணவு வகையினை ஒரு மாதத்திற்கு கைவிடுதல் நன்று. நல்ல உடல் ஆரோக்கியம் இருந்தால், தினசரி ஒருவேளை மட்டும் சாப்பிடுவதற்கு முயற்சி செய்யுங்கள்.

துளசி தேவிக்கு தினமும் ஆரத்தி செய்து கீர்த்தனம் பாடி, ஸ்ரீ ஸ்ரீ ராதா கிருஷ்ணரின் சேவையில் ஈடுபடுவதற்கு பிரார்த்தனை செய்யவும்.

தூய பக்தர்களுக்கு தானம் வழங்குதல் நன்று.

தினமும் சுவையான பதார்த்தங் களைப் படைத்து கிருஷ்ணருக்கு நைவேத்தியம் செய்யுங்கள்.

சாதுர்மாதத்தின் நான்காவது மாதம் என்பதால் தாமோதர மாதம் என்று அழைக்கப்படும் கார்த்திக் மாதத்தின் போது உளுத்தம் பருப்பினைத் தவிர்த்தல் அவசியம்.

மேலே குறிப்பிட்டுள்ள அனுஷ்டானங் கள் மட்டுமின்றி, பல்வேறு விளக்கமான அணுகுமுறைகள் ஹரி பக்தி விலாஸ் புத்தகத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. ஆழமான அவ்விரதங்களை அனுஷ் டித்தல் அனைவருக்கும் சாத்தியமல்ல என்பதால் அவை இங்கு கொடுக்கப் படவில்லை.

## கார்த்திக் மாதத்தின் திருவிழாக்கள்

கார்த்திக் மாதம் முழுவதுமே திருவிழா மாதம் என்றபோதிலும், சில குறிப்பிட்ட திருவிழாக்கள் சிறப்புப் பெறுகின்றன. அந்நாள்களில் விருந்தாவனம் கோலா கலமாகக் காட்சியளிக்கும். அவை பின்வருமாறு,

ராதா குண்டம் தோன்றிய பஹுலாஷ்டமி திருநாள்

தீபாவளி

கிருஷ்ணர் கோவர்த்தன மலையை உயர்த்திப் பிடித்ததை நினைவு கொள்ளும் கோவர்த்தன திருவிழா

ஸ்ரீல பிரபுபாதரின் நினைவுநாள்

(கார்த்திக் மாதத்தில் பெரும்பாலான இஸ்கான் கோவில்களில் விருந்தாவன யாத்திரைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு பக்தர்களை விருந்தாவனத்திற்கு அழைத்துச் செல்வது வழக்கம். மேலும் விபரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் கோவிலைத் தொடர்பு கொள்ளவும்.)

## ஸ்ரீ ஸ்ரீ தாமோதராஷ்டகம்

(ஸ்ரீ கிருஷ்ண துவைபாயண வியாசரால் எழுதப்பட்ட பத்ம புராணத்திலிருந்து எடுக்கப்பட்டது. நாரதர் மற்றும் சௌனக ரிஷியின் மத்தியில் சத்தியவிரத முனிவரால் பாடப்பட்டதாகும்.)

“பகவான் தாமோதரரைக் கவரக்கூடியதும் சத்தியவிரத முனிவரால் பாடப்பட்டதுமான தாமோதராஷ்டகம் எனப்படும் பிரார்த்தனையை தினமும் பாடி, கார்த்திக் மாதத்தில் ஒவ்வொருவரும் தாமோதரரை வழிபட வேண்டும்.” (ஸ்ரீ ஹரி பக்தி விலாஸ், 2.16.198)

நமாமீஷ்வரம் ஸச்-சித்-ஆனந்த-ரூபம்
லஸத்-குண்டலம் கோகுலே ப்ராஜமானம்
யஷோதா-பியோலூகலாத் தாவமானம்
பராம்ருஷ்டம் அத்யந்ததோ த்ருத்ய கோப்யா

ருதந்தம் முஹுர் நேத்ர-யுக்மம் ம்ருஜந்தம்
கராம்போஜ-யுக்மேன ஸாதங்க-நேத்ரம்
முஹு: ஷ்வாஸ-கம்ப-த்ரிரேகாங்க-கண்ட-
ஸ்தித-க்ரைவம் தாமோதரம் பக்தி-பத்தம்

இதீத்ருக் ஸ்வ-லீலாபிர் ஆனந்த-குண்டே
ஸ்வ-கோஷம் நிமஜ்ஜந்தம் ஆக்யாபயந்தம்
ததீயேஷித-க்ஞேஷு பக்தைர் ஜிதத்வம்
புன: ப்ரேமதஸ் தம் ஷதாவ்ருத்தி வந்தே

வரம் தேவ மோக்ஷம் ந மோக்ஷாவதிம் வா
ந சான்யம் வ்ருணே (அ)ஹம் வரேஷாத் அபீஹ
இதம் தே வபுர் நாத கோபால-பாலம்
ஸதா மே மனஸ்-யாவிராஸ்தாம் கிம் அன்யை:

இதம் தே முகாம்போஜம் அத்யந்த நீலைர்
வ்ருதம் குந்தலை: ஸ்னிக்த-ரக்தைஷ் ச கோப்யா
முஹுஷ் சும்பிதம் பிம்ப-ரக்தாதரம் மே
மனஸ்-யாவிராஸ்தாம் அலம் லக்ஷ-லாபை:

நமோ தேவ தாமோதரானந்த விஷ்ணோ
ப்ரஸீத ப்ரபோ து:க-ஜாலாப்தி-மக்னம்
க்ருபா-த்ருஷ்டி-வ்ருஷ்ட்யாதி-தீனம் பதானு-
க்ருஹாணேஷ மாம் அக்ஞம் ஏத்-யக்ஷி-த்ருஷ்ய:

குவேராத்மஜௌ பத்த-மூர்த்யைவ யத்வத்
த்வயா மோசிதௌ பக்தி-பாஜௌ க்ருதௌ ச
ததா ப்ரேம-பக்திம் ஸ்வகாம் மே ப்ரயச்ச
ந மோக்ஷே க்ரஹோ மே (அ)ஸ்தி தாமோதரேஹ

நமஸ் தே (அ)ஸ்து தாம்னே ஸ்புரத்-தீப்தி தாம்னே
த்வதீயோதராயாத விஷ்வஸ்ய தாம்னே
நமோ ராதிகாயை த்வதீய-ப்ரியாயை
நமோ (அ)னந்த-லீலாய தேவாய துப்யம்

(1) பூரண அறிவும் ஆனந்தமும் நிறைந்த நித்திய ரூபத்தில் வீற்றிருக்கும் முழுமுதற் கடவுளை நான் வணங்குகின்றேன். சுரா மீனின் வடிவிலுள்ள காதணிகள் இங்குமங்கும் ஆட, தெய்வீகத் திருத்தலமான கோகுலத்தில் அவர் அழகாக ஜொலித்துக் கொண்டுள்ளார். அன்னை யசோதையைக் கண்ட பயத்தால் மர உரலிலிருந்து இறங்கி வேகமாக ஓடத் தொடங்கினார். ஆனால் அதைவிட வேகமாக அவரை விரட்டிய அன்னையினால் அவரைப் பிடித்துவிட முடிந்தது. அந்த முழுமுதற் கடவுளான ஸ்ரீ தாமோதரருக்கு நான் எனது பணிவான வணக்கங்களை சமர்ப்பிக்கின்றேன்.

(2) (அன்னையின் கரங்களில் இருந்த கோலைக் கண்ட) அவர் அழுதபடி தாமரைக் கரங்களைக் கொண்டு, பயம் நிறைந்த கண்களை மீண்டும் மீண்டும் கசக்குகிறார். சங்கின் மூன்று கோடுகளை ஒத்திருக்கும் அவரது கழுத்தில் அவர் அணிந்திருக்கும் முத்து மணி மாலை, விம்மி அழுவதனால் அங்குமிங்கும் அசைகின்றது. கயிற்றினால் அல்ல, தனது அன்னையின் அன்பினால் வயிற்றில் கட்டப்பட்ட முழுமுதற் கடவுளான ஸ்ரீ தாமோதரருக்கு எனது பணிவான வணக்கங்களை சமர்ப்பிக்கின்றேன்.

(3) அத்தகு பால்ய லீலைகளினால் கோகுலவாசிகளை அவர் ஆனந்தக் கடலில் மூழ்கடிக்கின்றார். மதிப்பு மரியாதையைக் கடந்த நெருக்கமான தூய பக்தர்களால் மட்டுமே தன்னை வெல்ல முடியும் என்பதை, ஐஸ்வர்ய ஞானத்தில் மூழ்கியுள்ள தனது பக்தர்களுக்கு அவர் இதன் மூலம் வெளிப்படுத்துகிறார். மீண்டும் மீண்டும் எனது பணிவான வணக்கங்களை மிகவுயர்ந்த அன்புடன் பகவான் தாமோதரருக்கு நூற்றுக்கணக்கான முறைகள் சமர்ப்பிக்கின்றேன்.

(4) வரம் நல்குவோரில் சிறந்தவரான எம்பெருமானே, அரூபமான முக்தி, உயர்ந்த முக்தியான வைகுண்ட பிராப்தி, அல்லது வேறு எந்த வரத்தையும் நான் தங்களிடம் வேண்டுவதில்லை. பிரபுவே, விருந்தாவனத்தில் உள்ள உமது பால கோபால ரூபம் என் மனதில் எப்போதும் பதிந்திருக்க வேண்டும் என்பதே எனது ஒரே விருப்பம். இதை விட்டுவிட்டு வேறு வரத்தைப் பெறுவதால் என்ன பலன்?

(5) எம்பெருமானே, செம்மை கலந்த மிருதுவான கருமை நிற சுருள் கூந்தலால் சூழப்பட்டுள்ள தங்களின் தாமரைத் திருமுகம் மீண்டும் மீண்டும் அன்னை யசோதையினால் முத்தமிடப்படுகிறது; உதடுகள் கோவைப் பழம் போல சிவந்துள்ளன. இத்தாமரைத் திருமுகம் எப்போதும் என் மனதில் தோன்றுவதாக. இலட்சக்கணக்கான இதர லாபங்களால் எனக்கு எந்த பிரயோஜனமும் இல்லை.

(6) முழுமுதற் கடவுளே, தங்களுக்கு நான் எனது பணிவான வணக்கங்களைச் சமர்ப்பிக்கின்றேன். ஓ தாமோதரா! ஓ அனந்தா! ஓ விஷ்ணு! ஓ பிரபுவே, என்மீது திருப்தியடைவீராக. கருணை மிகுந்த தங்களது பார்வையை என்மேல் பொழிந்து, பௌதிகத் துன்பக் கடலில் மூழ்கி முட்டாளாக இருக்கும் என்னை விடுவியுங்கள்; எனது கண்களுக்குக் காட்சியளியுங்கள்.

(7) ஓ தாமோதரா, மர உரலில் கயிற்றால் கட்டப்பட்டுள்ள தங்களால் குபேரனின் இரு மகன்களும் (மணிக்ரீவன், நளகூவரன்) நாரதரின் சாபத்திலிருந்து விடுபட்டு மாபெரும் பக்தர்களாயினர். அதுபோன்ற பிரேம பக்தியை எனக்கும் கொடுங்கள். நான் அதற்காகவே ஏங்குகிறேன், எந்தவித முக்தியிலும் எனக்கு ஆசையில்லை.

(8) ஓ தாமோதரா, நான் எனது முதல் வணக்கங்களை உமது வயிற்றைக் கட்டியுள்ள அந்த ஒளிவிடும் கயிற்றுக்கு சமர்ப்பிக்கின்றேன். பின்னர், முழுப் பிரபஞ்சத்தின் இருப்பிடமான உம்முடைய வயிற்றிற்கும், உமக்கு மிகவும் பிரியமான ஸ்ரீமதி ராதாராணிக்கும், அதன் பின்னர் அளவில்லா லீலைகள் புரியும் முழுமுதற் கடவுளாகிய உமக்கும் எமது வணக்கங்களை சமர்ப்பிக்கின்றேன்.

# ஹரே கிருஷ்ண ஹரே கிருஷ்ண கிருஷ்ண கிருஷ்ண ஹரே ஹரே

# ஹரே ராம ஹரே ராம ராம ராம ஹரே ஹரே



ஸ்ரீ கிருஷ்ணருடனான நமது நித்திய உறவு புதுப்பிக்கப்படும்போது ஆன்மீகப் பண்பாட்டின் தெய்வீகத் தளத்தினை நம்மால் அடைய முடியும். அந்த தெய்வீகத் தளத்தினை வழங்குவதே *ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தின்* குறிக்கோள். எல்லாரையும் கவரும் பரம புருஷரான கிருஷ்ணரே முழுமுதற் கடவுள் என்பதையும் அவரின் அம்சங்களாகிய நாம் அனைவரும் அவரது தொண்டர்கள் என்பதையும் உணர்ந்து, பாடல், ஆடல், விருந்து, கலை, இலக்கியம், விஞ்ஞானம், தத்துவம் ஆகியவற்றைக் கொண்டு, மனித சமுதாயத்தை மீண்டும் ஆன்மீகப்படுத்துவதற்கான வழிமுறையினை கிருஷ்ண பக்தி இயக்கம் வழங்கி வருகிறது. இவ்வழிமுறை எளிமையானதும் நடைமுறைக்கு ஒத்துவரக்கூடியதும் அங்கீகரிக்கப்பட்டதுமாகும். அறிவியல், கல்வி, தொழில்நுட்பம், பொருளாதாரம் ஆகியவற்றில் முன்னேற்றம் கண்டுள்ள தற்போதைய சமுதாயம் ஆன்மீகத் துறையிலும் அத்தகு முன்னேற்றத்தை அடையவில்லையெனில், அனைத்தும் வீணாகிவிடும். நாட்டின் தலைவர்கள் அனைவரும் கிருஷ்ண உணர்வைத் தீவிரமாக எடுத்துக் கொண்டு, கிருஷ்ண விஞ்ஞானத்தை அறிவதில் ஆர்வம் காட்ட வேண்டும்; அதன் மூலம் பொதுமக்களை ஆன்மீகத்திலும் வழிகாட்ட அவர்களால் முடியும். மனித சமுதாயம் உண்மையான முன்னேற்றத்தை அடைய வேண்டுமெனில், மக்கள் தங்களது பௌதிக வசதிகளைப் பெருக்கிக் கொண்டால் மட்டும் போதாது; ஆன்மீக அமைதி, ஆனந்தம், மற்றும் அறிவையும் அடைதல் அவசியம். கலி யுகத்தில் மக்களின் ஆன்மீக வளர்ச்சிக்காகப் பரிந்துரைக்கப்படும் ஹரே கிருஷ்ண மஹா மந்திரத்தை ஜபம் செய்வதாலும், *ஸ்ரீ கிருஷ்ண தரிசனத்தில்* வழங்கப்படும் வேதப் பண்பாட்டின் தத்துவங்களைப் புரிந்துகொள்வதாலும், மனித சமுதாயம் தெய்வீகமான நிலைக்கு உயர்வு பெற்று, ஆன்மீக அமைதி, ஆனந்தம், மற்றும் அறிவைப் பெற இயலும்.

# உலகமெங்கிலும் ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி கொண்டாட்டம்

கடந்த செப்டம்பர் மாதம் முதல் வாரத்தில் பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அவதாரத் திருநாளான ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி உலகெங்கிலும் சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. உலகின் அனைத்து நாடுகளிலும் உள்ள அனைத்து இஸ்கான் கோவில்களிலும் கிருஷ்ண ஜெயந்தி திருவிழா வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. இந்தியாவின் அனைத்து முக்கிய நகரங்களிலும் ஆயிரக்கணக்கான மக்கள் இஸ்கான் கோவில்களுக்கு வருகை தந்து பகவான் ஸ்ரீ கிருஷ்ணரை தரிசித்து, கிருஷ்ணரின் திருநாமங்களை கீர்த்தனம் செய்து, கிருஷ்ண கதையை கேட்டு, கிருஷ்ண பிரசாதம் உண்டு மகிழ்ந்தனர். சமுதாயத்தின் முக்கியத் தலைவர்களும் அந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு சிறப்பித்தது குறிப்பிடத்தக்கதாகும். தமிழகத்தின் அனைத்து இஸ்கான் கோவில்களிலும் இத்திருவிழா மிகவும் விமரிசையாகக் கொண்டாடப்பட்டது.



அகமதாபாத்திலுள்ள இஸ்கான் கோவிலுக்கு வருகை புரிந்த குஜராத் முதல்வர் திரு.நரேந்திர மோடி

### கும்பகோணம்

சீரார் செந்நெல் கவரி வீசும் செழுநீர் திருக்குடந்தை என்று நம்மாழ்வாரால் போற்றப்படும் கும்பகோணத்தில் 9ஆவது வருடமாக ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி திருவிழா செப்டம்பர் 2ஆம் நாள் காலை 5 மணிக்கு மங்கள ஆரத்தியுடன் தொடங்கி மறுநாள் மதியம் 3 மணியளவில் ஸ்ரீல பிரபுபாதரின் வியாச பூஜையுடன் இனிதாக நிறைவேறியது. இப்பெருவிழாவில் மூவாயிரத்திற்கும் மேற்பட்ட பக்தர்களும் பொதுமக்களும் ஆரத்தி, ஹரிநாம சங்கீர்த்தனம், உறியடி, கண்கவர் வாண வேடிக்கை போன்ற பல நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர். அனைவருக்கும் ஸ்ரீ கிருஷ்ண பிரசாத விருந்து வழங்கப்பட்டது.



மணிமகுடமாக இரவு 12 மணிக்கு பால், தேன், நெய், பழரசங்கள், பூக்கள் என 35 வித சிறப்பு திருமஞ்சனம் பகவான் ஸ்ரீ கிருஷ்ணருக்கு நடைபெற்றது. அப்போது நடைபெற்ற ஹரிநாம சங்கீர்த்தனம் எல்லாரையும் பக்திப் பரவசத்தில் மூழ்கடித்தது. அதன் பின்னர், விரதமிருந்த நூற்றுக்கணக்கான பக்தர்களுக்கு அனுகல்ப (தானியங்கள் அற்ற) பிரசாத விருந்து வழங்கப்பட்டது. மறுநாள் ஸ்ரீல பிரபுபாதரின் வியாச பூஜையில் பங்கேற்ற நூற்றுக்கணக்கான பக்தர்கள் ஸ்ரீல பிரபுபாதரின் சீரிய தொண்டை நினைவு கூர்ந்தது நெஞ்சை நெகிழ வைத்தது. (தகவல்: விஜய வெங்கடேஷ தாஸ்)

### கோயம்புத்தூர்

ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி இஸ்கான் கோயம்புத்தூர் சார்பில் செப்டம்பர் 1ஆம் தேதியிலிருந்து 5ஆம் தேதி வரை சீரும் சிறப்புமாகக் கொண்டாடப்பட்டது. அந்நாள்களில் கோவிலுக்கு வருகை புரிந்த 60,000 மக்களுக்கும் பிரசாத விநியோகம் செய்யப்பட்டது. தென்னிந்தியாவின் இதர கோவில்களைப் போன்று அர்ச்சனை செய்வதற்கான வசதியும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. நிகழ்ச்சியின் தலைமை விருந்தினராக தமிழக ஊரக வளர்ச்சித் துறை அமைச்சரான திரு.பொங்கலூர் பழனிசாமி அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார். "ஹரே கிருஷ்ண பக்தர்கள் மிகவும் ஒழுக்கமானவர்கள் என்றும் உலகம் முழுவதும் இந்திய கலாசாரத்தைப் பரப்பி வருகின்றனர் என்றும், நான் பலரிடமிருந்து கேட்டறிந்தது மட்டுமின்றி நானே நேரில் கண்டுள்ளேன். இலட்சக்கணக்கான மக்களுக்கும் குழந்தைகளுக்கும் இஸ்கான் அமைப்பின் மூலம் நடத்தப்படும் பிரசாத விநியோக நிகழ்ச்சி என்னை மிகவும் கவர்ந்த ஒன்று," என்று அவர் பேசினார். வணக்கத்திற்குரிய மேயர் திரு. R.வெங்கடாசலம், பண்ணாரி

அம்மன் சர்க்கரை ஆலையின் தலைமை நிர்வாகியான திரு. S.V.பாலசுப்ரமணியம், ஆர்ய வைத்யசாலையின் நிர்வாக இயக்குனரான பத்மஸ்ரீ முனைவர் P.R.கிருஷ்ணகுமார், உட்பட பல்வேறு விருந்தினர்கள் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இஸ்கானின் செயல்களை அவர்கள் அனைவரும் வெகுவாகப் பாராட்டினர். ஜென்மாஷ்டமி முக்கியத்துவம் குறித்து நவீன மல்டிமீடியாக்களைக் கொண்டு தவத்திரு.பக்தி வினோத ஸ்வாமி மக்களுக்கு விளக்கினார்.



செப்டம்பர் 3ஆம் தேதி காலை வேளையில் ஸ்ரீல பிரபுபாதரின் வியாச பூஜை சிறப்பாக நடைபெற்றது. அன்றைய நாள் மாலை வேளையில் கல்லூரி மாணவர்களுக்காக "உற்சாகம்" என்ற பெயரில் சிறப்பு நிகழ்ச்சி ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டு, அதில் சுமார் 300 மாணவர்கள் கலந்து கொண்டனர். விஞ்ஞான ரீதியிலும் தொழில் நுட்ப ரீதியிலும் உற்சாகம் குறித்து தவத்திரு.பக்தி வினோத ஸ்வாமி விளக்கினார். உலகிலுள்ள மக்கள் அனைவரையும் பிறப்பு இறப்பின் சுழற்சியிலிருந்து விடுவிப்பதற்காக தனது 70 வயதில் இரண்டு மாரடைப்புகளுக்கு மத்தியில், அமெரிக்கா சென்று பின்னர் உலகெங்கிலும் இஸ்கான் மையங்களை ஸ்தாபித்த ஸ்ரீல பிரபுபாதர் உலகிலேயே மிகவும் உற்சாகமானவராகத் திகழ்ந்தார் என்று அவர் ஸ்ரீல பிரபுபாதரை வர்ணித்தார். (தகவல்: சங்கர்ஷன கௌர தாஸ்)

## சென்னை

செப்டம்பர் முதல் தேதியன்று தொடங்கிய ஜென்மாஷ்டமி திருவிழா மூன்று நாள்கள் தொடர்ந்து நடைபெற்றது. பல்வேறு பக்தர்களும் கலைஞர்களும் நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு பலதரப்பட்ட கலைகளைக் கொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரைப் புகழ்ந்தனர். செப்டம்பர் 2ஆம் தேதியன்று NEPC குழுவின் தலைவரான திரு.ரவி பிரசாத் கெம்கா அவர்கள் தலைமை விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றினார். 1976இல் ஸ்ரீல பிரபுபாதர் சென்னை வந்திருந்தபோது அவரைச் சந்தித்து இஸ்கானின் ஆயுள் அங்கத்தினராக இணைந்த திரு.கெம்கா அவர்கள், இஸ்கான் சென்னையின் திருக்கோவில் வளர்ச்சிப் பணிகளுக்குத் தொடர்ந்து உதவி வருகின்றார். தவத்திரு. பானு ஸ்வாமி அவர்களின் முன்னிலையில், அவர் கோவில் கட்டுமானப் பணிகளுக்கு உதவுவதற்காக பாத சேவைத் திட்டத்தை அறிமுகப்படுத்தினார். சோழிங்கநல்லூர் பஞ்சாயத்து தலைவரான திரு. ரமேஷ் அவர்களும், தமிழக பாரதீய ஜனதா கட்சியின் பொது காரியதரிசியான திரு.மோகன ராஜுலு அவர்களும் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.



சீரான முறையில் பக்தர்களால் உருவாக்கப்பட்டு அரங்கேற்றப்பட்ட "பில்வமங்கள தாகூர்" என்னும் நாடகம், மாலை நேரத்தின் கலை நிகழ்ச்சிகளில் சிறப்பான வரவேற்பைப் பெற்றது. நள்ளிரவில் மஹா அபிஷேகம் மற்றும் கீர்த்தனையுடன் ஜென்மாஷ்டமி நிகழ்ச்சி நிறைவு பெற்றது. மறுநாள் ஸ்ரீல பிரபுபாதரின் வியாச பூஜை விழாவும் சிறப்பாக நடந்தேறியது. மூன்று நாள் நிகழ்ச்சிகளில் சுமார் 5,000 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இஸ்கான் சென்னையின் பெரம்பூர் கிளை சார்பில் செப்டம்பர் முதல் தேதியன்று "ஆனந்தன் அரங்கம்" மண்டபத்தில் ஜென்மாஷ்டமி திருவிழா கொண்டாடப்பட்டது. தவத்திரு. பானு ஸ்வாமி மஹாராஜர் அருளிய உபன்யாசமும், பக்தர்களால் அரங்கேற்றப்பட்ட "மிருகாரி" என்னும் நாடகமும் நிகழ்ச்சியின் சிறப்பம்சமாக விளங்கின. சுமார் 1,000 பக்தர்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சி, அபிஷேகம், கீர்த்தனம், ஆரத்தி மற்றும் பிரசாத விருந்துடன் நிறைவு பெற்றது.

மேலும், ஆவடியிலும் மறைமலை நகரிலும் நடந்த ஜென்மாஷ்டமி நிகழ்ச்சிகள் பரந்து விரிந்திருக்கும் சென்னை மாநகர மக்களுக்கு மிகவும் உதவியாக அமைந்தன. (தகவல்: சுகீர்தி மாதவி தேவி தாஸி)



## சேலம்

இஸ்கான் சேலம் சார்பில் செப்டம்பர் 2ஆம் தேதியன்று ஜென்மாஷ்டமி கொண்டாடப்பட்டது. மாலை 6 மணிக்கு ஆரத்தி, கீர்த்தனம், மற்றும் கோபர்களாக உடையணிந்த பக்தர்களின் குழந்தைகள் பாடிய சிக்ஷாஷ்டகத்துடன் நிகழ்ச்சி தொடங்கியது. விருந்தாவன தாமத்தை நினைவுபடுத்தும் விதத்தில் முழுப் பந்தலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது. விருந்தாவனத்தில் கிருஷ்ணருடைய வாகனம் மாட்டு வண்டி என்பதால், ஸ்ரீ ஸ்ரீ கௌர நித்தாய் விக்ரஹங்கள் அழகான மலர்களாலும் பழங்களாலும் அலங்கரிக்கப்பட்ட ஒரு மாட்டு வண்டியில் அமர்த்தப்பட்டிருந்தனர். பக்தர்களால் செய்யப்பட்ட 1008க்கும் மேற்பட்ட உணவு வகைகள் பகவானுக்கு நைவேத்யம் செய்யப்பட்டன. விக்ரஹங்களுக்கு எதிரில் யமுனை நதியினால் சூழப்பட்டதுபோன்ற தனி மேடை அமைக்கப்பட்டிருந்தது; அதனுள் அமர்ந்திருந்த பக்தர்கள், பஜனை, கீர்த்தனம், மற்றும் சொற்பொழிவுகளை ஆற்றினர். இனிப்புகளால் அலங்கரிக்கப்பட்ட கோவர்த்தன மலை, களிமண்ணால் செய்யப்பட்ட அழகிய பசுக்கள், தொங்க விடப்பட்டிருந்த வெண்ணைப் பானைகள், கிருஷ்ண லீலைகளை விளக்குவதற்காக பந்தல் முழுவதும் அமைக்கப்பட்டிருந்த அழகிய படங்கள், பூ மாலைகள், பழ மாலைகள், வாழைக் கன்றுகள் போன்றவை ரம்மியமாகக் காட்சியளித்தன.



நான் யார்? கிருஷ்ணர் யார்? பக்தி என்றால் என்ன? ஆகிய மூன்று தலைப்புகளில் வெவ்வேறு பக்தர்களால் வழங்கப்பட்ட சொற்பொழிவுகள் வந்திருந்தோரைக் கவர்ந்தன. கிருஷ்ணரின் அவதாரம் குறித்து பக்தர்களின் குழந்தைகளால் நடத்தப்பட்ட எளிய நாடகத்தைத் தொடர்ந்து, ஸ்ரீ ஸ்ரீ கௌர நித்தாய் விக்ரஹங்களுக்கு மஹா அபிஷேகம் சிறப்பான முறையில் செய்யப்பட்டது. பரவசத்தைத் தூண்டும் கீர்த்தனத்தில் கவரப்பட்டு ஆடிய பக்தர்களின் முன்னிலையில், மஹா ஆரத்தியுடன் நிகழ்ச்சி நிறைவுற்றது. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பொதுமக்கள் அனைவருக்கும் மாலை முதல் நள்ளிரவு வரை 10 வகையான பிரசாத விருந்து விநியோகம் செய்யப்பட்டது. 30,000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில், சேலம் மாநகர காவல்துறை ஆணையர் திரு.சுனில் குமார் சிங் விருந்தினராகக் கலந்து கொண்டார். ஸ்ரீல பிரபுபாதரின் மாபெரும் பொக்கிஷமான அவரது புத்தகங்கள் நூற்றுக்கணக்கில் விநியோகிக்கப்பட்டன. மொத்தத்தில், வந்திருந்த பொதுமக்கள் அனைவரும், விழா ஏற்பாட்டினைப் பார்த்து பிரமித்துப் போனது மட்டுமின்றி, கிருஷ்ண பக்தியில் முன்னேற்றம் பெறுவதற்கான உறுதியுடன் சென்றனர் என்பது நிச்சயம். மறுநாள் நடைபெற்ற ஸ்ரீல பிரபுபாதரின் வியாச பூஜையில் சுமார் 1,000 பேர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இஸ்கானில் நடைபெற்ற இந்த மாபெரும் ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி திருவிழா, மறுநாள் காலையில் வெளிவந்த அனைத்து நாளிதழ்களிலும் வண்ணப் படங்களுடன் வெளிவந்தது சிறப்பாகும்.

மேலும், சேலம் இஸ்கான் சார்பாக செப்டம்பர் 4ஆம் தேதியன்று நாமக்கல்லில் நடைபெற்ற ஜென்மாஷ்டமி நிகழ்ச்சியில் சுமார் 1,000 பேர் கலந்து கொண்டனர். (தகவல்: ஸ்ரீனிவாஸ கிருஷ்ண தாஸ்)

## திருநெல்வேலி

2006இல் கும்பாபிஷேகம் செய்யப்பட்டு, ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண பலராமர் திருவருள் பாலிக்கும் இஸ்கான் திருநெல்வேலியின் ஐந்தாவது கிருஷ்ண ஜெயந்தி விழா 3 நாள்கள் சிறப்பாக நடைபெற்றது. இவ்விழாவில், ஸ்ரீ ஸ்ரீ கிருஷ்ண பலராமருக்கு சிறப்பு அபிஷேகங்களும் சிறப்பு ஆரத்திகளும் நடைபெற்றன. சுமார் 5,200க்கும் மேற்பட்டோர் இவ்விழாவில் பங்கு பெற்றனர். காவல்துறை துணை ஆணையரின் குடும்பத்தினர் சிறப்பு விருந்தினராகப் பங்கேற்றனர். இவ்விழாவில் பங்குபெற்ற அனைவருக்கும் கிருஷ்ண பிரசாதம் வழங்கப்பட்டது. ஆயுள் உறுப்பினர்களும் பக்தர்களும் சிரமமின்றி தரிசனம் செய்யவும், பிரசாதம் பெறவும் சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. விழாவின்போது ஹரி நாம சங்கீர்த்தனமும், அபிஷேகத்தின் போது பிரம்ம சம்ஹிதை பாராயணமும் தொடர்ந்து



நடைபெற்றன. மாணவர்களும், அரசு அலுவலர்களும், மருத்துவர்களும் சேர்ந்து விழா சிறக்க சேவை செய்தனர். இவ்விழாவில் புதிதாக சுமார் 350 பேர் ஹரே கிருஷ்ண மஹாமந்திர ஜபம் செய்ய உறுதியெடுத்து ஜபமாலை பெற்றுச் சென்றனர். மூன்றாவது நாளான பிரபுபாதரின் பிறந்த நாள் விழாவில், பிரபுபாதரின் வழியில் இஸ்கானுடன் இணைந்து கிருஷ்ண பக்தியைப் பரப்ப, லக்ஷ்மி சேவை, புத்தக விநியோக சேவை, மற்றும் திருக்கோயில் சம்பந்தப்பட்ட அனைத்து சேவைகளைச் செய்ய தங்களை அர்ப்பணிப்பதாக 60 பக்தர்கள் உறுதி எடுத்தனர். (தகவல்: கருணாசிந்து கிருஷ்ண தாஸ்)

## நாகர்கோவில்

ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி விழா மிகவும் சிறப்பான முறையில் கன்னியாகுமரி மாவட்டத்தில் செப்டம்பர் முதல் தேதியன்று இஸ்கான் இயக்கத்தினரால், நாகர்கோவில் செட்டிகுளம் ஜங்ஷனில் உள்ள கிருஷ்ண மஹாலில் கொண்டாடப்பட்டது. குழந்தைகளுக்கான வினாடி வினா, கிருஷ்ண கதா, மாறுவேடம் போன்றவற்றுடன் நிகழ்ச்சி தொடங்கியது. அதனைத் தொடர்ந்து ஆரத்தி, நாம அர்ச்சனை, உறியடி, அபிஷேகம், பால முகுந்த பூஜை மற்றும் பஜனைகள் நடைபெற்றன. சுமார் 6,500 பக்தர்கள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பகவான் ஸ்ரீ கிருஷ்ணரின் அருளைப் பெற்றனர். மாலை 3:30 மணியிலிருந்து நள்ளிரவு 12 மணி வரை பிரசாத விநியோகம் அனைவருக்கும் நடைபெற்றது. (தகவல்: விக்ரம கோவிந்த தாஸ்)



## மதுரை

ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி இஸ்கான் மதுரையில் செப்டம்பர் 1,2,3 ஆகிய 3 நாள்களும் கோலாகலத்துடன் கொண்டாடப்பட்டது. முதல் இரண்டு நாள்களில் கிருஷ்ண ஜெயந்தி வைபவங்களும், மூன்றாம் நாளன்று நந்தோத்சவமும் இஸ்கான் ஸ்தாபக ஆச்சாரியர் ஸ்ரீல பிரபுபாதரின் பிறந்தநாளும் கொண்டாடப்பட்டது.

இவ்விழாவின் சிறப்பம்சம், காலையில் ஸ்ரீ ஸ்ரீ ராதா மதுராபதியின் மூல மூர்த்தி அபிஷேகமாகும். இதில் 400க்கும் மேற்பட்ட சேவாதாரர்களும், பக்தர்களும் பங்கு கொண்டனர். பகவானுக்கு பஞ்சாமிர்தம், பஞ்சகவ்யம் மற்றும் பழரசங்களாலும் அபிஷேகம் செய்யப்பட்டு, பின் மஞ்சள் நீராட்டி பலவகையான பூ மலர்களால் அபிஷேகம் செய்யப்பட்டது. அதன் பின் புத்தாடை உடுத்தி ஸ்ரீ ஸ்ரீ ராதா மதுராபதி பக்தர்களுக்கு சிறப்பு தரிசனம் அளித்தார். கோயில் வளாகம், பூ மாலைகளாலும் தோரணங்களாலும் அலங்கரிக்கப்பட்டு வந்திருந்த பக்தர்களுக்கு வைகுண்ட வாசனையை கொடுத்தது. மாலையில் பொதுமக்களுக்கும் ஆயுள் உறுப்பினர்களுக்கும் ஸ்ரீ ஸ்ரீ ராதா மதுராபதி சிறப்பு தரிசனம் அளித்து அருள்பாலித்தார். முதல் இரண்டு நாட்களில் 11 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பகவானை தரிசனம் செய்து அருள்பெற்றனர். சிறப்பு விருந்தினராக காவல்துறை துணை ஆணையர் திரு.குமாரவேல் அவர்கள் பங்கேற்றார். வந்திருந்த அனைவருக்கும் பிரசாதம் வழங்கப்பட்டது. சிறப்பு சேவாதாரிகளுக்கு விசேஷ பூஜைகள் செய்யப்பட்டன. நள்ளிரவு வரை தொடர்ந்த இந்த விழாவின் உச்சகட்ட அம்சமாக பகவான் அவதரித்த நள்ளிரவில் பஜனையுடன் கூடிய சிறப்பு ஆரத்தி நடந்தது. அதில் பங்கேற்ற 500க்கும் மேற்பட்ட விரதம் காத்த பக்தர்கள் பகவானின் அபிஷேக சரணாம்ருதம் பருகி, தங்கள் விரதத்தை முடித்தனர்.

இந்த இரண்டு நாள் விழாவின் சிறப்பம்சமாக புதிதாக 800க்கும் மேற்பட்டோர் ஹரே கிருஷ்ண மஹாமந்திரம் ஜபிக்க உறுதி எடுத்து அதற்குரிய ஜபமாலையைப் பெற்றுச் சென்றனர். மற்றொரு சிறப்பம்சம் கிருஷ்ண ஜெயந்தி விழாவில் வழங்கப்பட்ட பெரும்பாலான பிரசாதங்கள் பக்தர்களாலே தயார் செய்யப்பட்டது. மேலும் 30க்கும் மேற்பட்ட மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரி மாணவர்கள் விழா சிறக்க சேவை செய்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.



மூன்றாவது நாள்: நந்தோத்சவமும், பிரபுபாதரின் பிறந்த நாளும் கொண்டாடப்பட்ட நல்ல நேரத்தில் பிரபுபாதரின் வழியில் இஸ்கானுடன் இணைந்து கிருஷ்ண பக்தியைப் பரப்ப லக்ஷ்மி சேவை, புத்தக விநியோக சேவை, மற்றும் திருக்கோயில் சம்பந்தப்பட்ட அனைத்து சேவைகள் செய்ய தங்களை அர்ப்பணிப்பதாக 140 பக்தர்கள் உறுதி எடுத்தனர். (தகவல்: கருணாசிந்து கிருஷ்ண தாஸ்)

## வேலூர்

இஸ்கான் வேலூர் சார்பில் ஜென்மாஷ்டமி திருவிழா இரண்டு முறை கொண்டாடப்பட்டது. கோவிலுக்கு அருகிலுள்ள மண்டபத்தில் செப்டம்பர் 2ஆம் நாளன்று நடைபெற்ற எளிய விழாவில் சுமார் 1,000 பேர் கலந்து கொண்டனர்.

பொதுமக்கள் அனைவரும் பயன் பெறும் பொருட்டு, வேலூர் மாநகரின் முக்கிய இடமான கோட்டை மைதானத்தில் செப்டம்பர் 14ஆம் தேதியன்று ஜென்மாஷ்டமி நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. தவத்திரு பானு ஸ்வாமி மஹாராஜ் அவர்கள் நிகழ்ச்சிக்குத் தலைமை வகித்து சிறப்புரையாற்றினார். மேலும், திருக்கோவிலூர் ஜீயரான திரு. ஸ்ரீனிவாச ராமானுஜ ஆச்சாரியர், வேலூர் மாநகர மேயரான திரு.கார்த்திகேயன், வேலூர் சட்டமன்ற உறுப்பினரான திரு.ஞானசேகரன், வேலூர் மாவட்ட ஆட்சியரான திரு.ராஜேந்திரன் ஆகியோர் நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




கலி யுகத்தில் இறைவனை அடைவதற்கான வழிமுறை நாம சங்கீர்த்தனம் என்பதை திருக்கோவிலூர் ஜீயர் அவர்கள் விளக்கினார். உலகெங்கிலும் பாரத கலாசாரத்தையும் ஆன்மீகத்தையும்வளர்த்து எண்ணிலடங்காத புத்தகங்களையும் எழுதிய ஸ்ரீல பிரபுபாதரை திரு.ஞானசேகரன் அவர்கள் போற்றி உரை மொழிந்தார். ஜாதி, மத பேதமின்றி அனைவருக்கும் கிருஷ்ண பக்தியை வழங்கி வருவதாக இஸ்கானிற்கு திரு.ராஜேந்திரன் அவர்கள் புகழாரம் சூட்டினார். நம் அனைவரின் தர்மம் கிருஷ்ணருக்குத் தொண்டு செய்வதே என்றும், அதனைச் செய்வதற்கான வழிமுறை பக்தி என்றும் விளக்கமளித்தார் தவத்திரு. பானு ஸ்வாமி அவர்கள். அவர்களின் உரையினைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் பக்தர்களால் இயற்றப்பட்ட மிருகாரி என்னும் நாடகமும் அரங்கேறின. இரவு 12 மணி வரை நடந்த நிகழ்ச்சிகள் மஹா ஆரத்தியுடன் நிறைவு பெற்றன. சுமார் 10,000 மக்கள் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியினை அனைத்து பத்திரிகை மற்றும் தொலைக்காட்சிகள் பதிவு செய்து வெளியிட்டன என்பது குறிப்பிடத்தக்கது. (தகவல்: மாதவானந்த தாஸ்)

## ஸ்ரீரங்கம்

ஸ்ரீ ஸ்ரீ ராதா ராஜகோபால் விக்ரஹங்கள் ஸ்ரீரங்கத்தில் உள்ள இஸ்கான் கோவிலுக்கு செப்டம்பர் முதல் தேதியன்று வந்தடைந்தனர். அன்று மாலை நடைபெற்ற ஆதிவாஸ் நிகழ்ச்சியில் சுமார் 75 பக்தர்கள் கலந்து கொண்டனர். இரண்டாம் தேதியன்று மாலை 6:30 மணியளவில் யோகா கல்யாண மண்டபத்தில் கீர்த்தனத்துடன் நிகழ்ச்சி ஆரம்பமானது. கிருஷ்ண லீலை நடனம், தசாவதாரம் போன்ற கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடந்தேறின. 800க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்ட இந்நிகழ்ச்சியில் சுமார் 2,000 பொதுமக்களுக்கு பிரசாத விநியோகம் நடைபெற்றது. அதன் பின்னர், நடைபெற்ற அபிஷேக நிகழ்ச்சியில் சுமார் 350 பக்தர்கள் கலந்து கொண்டனர். ஆரத்திக்குப் பின்னர், அனைவருக்கும் அனுகல்ப பிரசாதம் விநியோகிக்கப்பட்டது. மறுநாள் நடைபெற்ற ஸ்ரீல பிரபுபாதரின் வியாச பூஜை நிகழ்ச்சியில் சுமார் 300 பேர் கலந்துகொண்டு ஸ்ரீல பிரபுபாதரைப் புகழ்ந்தனர். (தகவல்: அசோக கோவிந்த தாஸ்)

## பாண்டிச்சேரி

செப்டம்பர் முதல் தேதியன்று ஜென்மாஷ்டமி நிகழ்ச்சிகள் பாண்டிச்சேரியிலும் சிறப்பாக நடைபெற்றன. பல்வேறு கலை நிகழ்ச்சிகள், அபிஷேகம், ஆரத்தி, கீர்த்தனம் போன்ற நிகழ்ச்சிகளில் நூற்றுக்கணக்கானோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.



# ஸ்ரீமத் பாகவதம்

வேத இலக்கியங்கள் என்னும் மரத்தின் பழுத்த பழமாகக் கருதப்படும் ஸ்ரீமத் பாகவதமே வேத ஞானத்தின் பூரணமான அங்கீகரிக்கப்பட்ட சாஸ்திரமாகும். சுமார் ஐயாயிரம் வருடங்களுக்கு முன்பு தொகுக்கப்பட்ட இந்த வரலாற்றுக் காவியம், மாமுனிவரான கிருஷ்ண துவைபாயன வியாசரால் அவர் எழுதிய வேதாந்த சூத்திரத்திற்கு அவரே வழங்கிய விளக்கவுரையாகும். அகில உலக கிருஷ்ண பக்தி இயக்கத்தின் ஸ்தாபக ஆச்சாரியரான தெய்வத்திரு அ.ச. பக்திவேதாந்த சுவாமி பிரபுபாதர் அவர்கள் பன்னிரண்டு காண்டங்கள் கொண்ட அந்த மாபெரும் காவியத்திற்கு பதினெட்டு பெரும் புத்தகங்களில் விளக்கமளித்துள்ளார். அப்புத்தகத்தின் முதல் காண்டத்தினை இப்பத்திரிகையின் ஒவ்வொரு வெளியீட்டிலும் தொடர்ந்து பிரசுரித்து வருகிறோம்.

## சாதுக்களின் கேள்விகள்

### முதல் அத்தியாயம், ஸ்லோகம் 10

ப்ராயேணால்பாயுஷ: ஸப்ய கலாவ் அஸ்மின் யுகே ஜனா:
மந்தா: ஸுமந்த-மதயோ மந்த-பாக்யா ஹி உபத்ருதா:

#### மொழிபெயர்ப்பு

கற்றறிந்தவரே, இரும்பு யுகமான இக்கலி யுகத்தில் மக்கள் பெரும்பாலும் அற்ப ஆயுளுள்ளவர்களாக உள்ளனர். அவர்கள் சண்டையிடுபவர்களாகவும், சோம்பேறிகளாகவும், தவறாக வழிநடத்தப்பட்டவர்களாகவும், அதிர்ஷ்டமற்றவர்களாகவும், அனைத்திற்கும் மேலாக எப்பொழுதும் சஞ்சலமானவர்களாகவும் உள்ளனர்.

#### பொருளுரை

பகவானின் பக்தர்கள் பொதுமக்களின் ஆன்மீக முன்னேற்றத்தில் எப்பொழுதும் ஆவலுள்ளவர்களாக இருக்கின்றனர். இக்கலி யுகத்திலுள்ள மக்களுடைய நிலையை ஆராய்ந்தறிந்த நைமிஷாரண்ய முனிவர்கள், மனிதர்கள் குறுகிய காலம் மட்டுமே வாழ்வார்கள் என்பதை தீர்க்கதரிசனத்தால் அறிந்தனர். கலி யுகத்தில் ஆயுள் குறைக்கப்படுவதற்கு, உணவு பற்றாக்குறை என்ற காரணத்தைவிட ஒழுங்கற்ற பழக்கவழக்கங்களே முக்கிய காரணமாகும். முறையான பழக்கவழக்கங்களை அமைத்துக் கொள்வதாலும், எளிய உணவை உண்பதாலும் எந்த மனிதனும் தனது ஆரோக்கியத்தைக் காப்பாற்றிக் கொள்ளலாம். அதிகமாக உண்பது, அதிகமான புலனின்பம், அதிகமாக பிறர் தயவை நம்பியிருத்தல், செயற்கையான வாழ்வு முறைகள் ஆகியவை மனிதனின் முக்கிய சக்தியை உறிஞ்சிவிடுகின்றன. ஆகவே ஆயுள் குறைந்துவிடுகிறது.

இந்த யுகத்தைச் சேர்ந்த மக்கள், பௌதிக விஷயத்தில் மட்டுமல்லாமல், ஆன்மீகத் தன்னுணர்வின் விஷயத்திலும் மிகவும் சோம்பேறிகளாக உள்ளனர். மனித வாழ்வு குறிப்பாக தன்னுணர்வுக்கென்றே உள்ளதாகும். அதாவது மனிதன் தான் யாரென்பதையும், இவ்வுலகம் என்னவென்பதையும், பரம சத்தியம் என்னவென்பதையும் அறிய முயலவேண்டும். மனித வாழ்வு என்பது, பௌதிக வாழ்விலுள்ள கடினமான போராட்டங்களின் எல்லாத் துன்பங்களையும் ஜீவராசி முடித்துக் கொள்வதற்கும், அவனுடைய நித்திய வசிப்பிடமாகிய பரம புருஷரிடம் திரும்பிச் செல்வதற்கும் உரிய ஒரு சாதனமாகும். ஆனால், தவறான கல்வி முறையின் காரணத்தினால், தன்னுணர்வுக்கான ஆசையே மனிதர்களுக்கு இல்லை. அப்படியே இதைப்பற்றி அவர்கள் அறிய நேர்ந்தாலும், தவறாக வழிகாட்டும் ஆசிரியர்களால் அவர்கள் துரதிர்ஷ்டவசமாக ஏமாற்றப்படுகின்றனர்.

இந்த யுகத்தில், மனிதர்கள் பல்வேறு அரசியல் கொள்கைகளாலும் கட்சிகளாலும் வஞ்சிக்கப்படுவது மட்டுமின்றி, திரைப்படம், விளையாட்டு, சூதாட்டம், கேளிக்கைக் கூடம் (கிளப்), பௌதிக நூல் நிலையங்கள், தவறான சங்கம், புகைப்பிடித்தல், மது அருந்துதல், ஏமாற்றுதல், திருடுதல், சின்னஞ்சிறு சண்டைகள் போன்ற பலவகையான புலனின்பப் பொழுதுபோக்குகளுக்கு இரையாகின்றனர். எப்பொழுதும் சஞ்சலமாக இருக்கும் அவர்களுடைய மனம், பல்வேறு ஈடுபாடுகளின் காரணத்தினால் கவலையால் நிரம்பியுள்ளது. இந்த யுகத்தில், மனசாட்சியற்ற மனிதர்கள் பலர், எந்த சாஸ்திரத்தின் அடிப்படையும் இன்றி தங்களுடைய சொந்த மத நம்பிக்கைகளை ஏற்படுத்திக் கொள்கின்றனர்; புலனின்பத்திற்கு அடிமையானவர்கள் பல சந்தர்ப்பங்களில் அத்தகைய இயக்கங்களால் கவரப்படுகின்றனர். இதன் விளைவாக, மதத்தின் பெயரால் பல பாவங்கள் செய்யப்பட்டு வருவதால், பொது மக்களுக்கு மன அமைதியோ உடல் ஆரோக்கியமோ இல்லாமல் போய்விட்டது. தற்போதைய நிலையில், பிரம்மசாரி சமூகம் பராமரிக்கப்படுவதே இல்லை, குடும்பஸ்தர்களும் கிருஹஸ்த ஆசிரமத்திற்குரிய விதிமுறைகளைப் பின்பற்றுவதில்லை. அதன் விளைவாக இத்தகைய கிருஹஸ்த ஆசிரமங்களிலிருந்து உருவாகும் பெயரளவேயான வானபிரஸ்தர்களும் சந்நியாசிகளும் உறுதியான பாதையிலிருந்து சுலபமாக வழி தவறிவிடுகின்றனர். கலி யுகத்தின் முழுச் சூழ்நிலையும் மத நம்பிக்கையற்ற தன்மையினால் நிரம்பியுள்ளது. ஆன்மீக வாழ்வில் மனிதர்களுக்கு இருந்த ஆர்வம் குன்றிவிட்டது. பௌதிகப் புலனின்பமே தற்போதைய நாகரிகமாகத் திகழ்கின்றது. அத்தகு ஜட நாகரிகங்களைப் பராமரிப்பதற்காக, சிக்கலான நாடுகளையும் சமுதாயங்களையும் மனிதன்

உருவாக்கியுள்ளான். அந்த வேறுபட்ட பிரிவுகளுக்கிடையே நேரடி யுத்தங்களும் மறைமுக யுத்தங்களும் இடைவிடாது நடைபெற்று வருகின்றன. தற்போதைய மனித சமுதாயத்தின் மதிப்புகள் சீர்குலைந்து வருகின்றன; எனவே, ஆன்மீகத் தரத்தை உயர்த்துவது மிகவும் சிரமமானதாக இருக்கின்றது. வீழ்ச்சியடைந்த அனைத்து ஆத்மாக்களையும் பந்தத்திலிருந்து விடுவிப்பதில் மிகவும் ஆர்வமாக உள்ள நைமிஷாரண்ய முனிவர்கள், அதற்கான தீர்வை ஸ்ரீல சூத கோஸ்வாமியிடமிருந்து இங்கு எதிர்பார்க்கின்றனர்.

### ஸ்லோகம் 11

பூரீணி பூரி-கர்மாணி ஷ்ரோதவ்யானி விபாகஷ:
அத: ஸாதோ (அ)த்ர யத் ஸாரம் ஸமுத்த்ருத்ய மணீஷயா
ப்ரூஹி பத்ராய பூதானாம் யேனாத்மா ஸுப்ரஸீததி

### மொழிபெயர்ப்பு

பலவகையான சாஸ்திரங்களில் பல வகையான கடமைகள் விதிக்கப்பட்டுள்ளன. அவற்றின் பல்வேறு பிரிவுகளை பற்பல ஆண்டுகள் கற்ற பிறகுதான் அவற்றை அறிய முடியும். எனவே, சாதுவே, தயவுசெய்து இவ்வெல்லா சாஸ்திரங்களின் சாரத்தைத் தேர்ந்தெடுத்து, அனைத்து ஜீவராசிகளின் நன்மைக்காகவும் அதை விளக்குங்கள். அத்தகைய உபதேசங்களால் அவர்களுடைய இதயங்கள் பூரணமாக திருப்தியடையக் கூடும்.

### பொருளுரை

ஜடத்திலிருந்தும் ஜட மூலப் பொருள்களிலிருந்தும் ஆத்மா வேறுபட்டதாகும். ஆன்மீகத் தன்மையைக் கொண்ட ஆத்மாவினை எந்த வித பௌதிக ஏற்பாட்டினாலும் திருப்தி செய்ய முடியாது. எல்லா சாஸ்திரங்களும் ஆன்மீக உபதேசங்களும் ஆத்மாவை திருப்திப்படுத்துவதற்காகவே உள்ளன. பல தரப்பட்ட காலங்களுக்கும் பல தரப்பட்ட சூழ்நிலைகளுக்கும் ஏற்ப பல தரப்பட்ட ஜீவராசிகளுக்கு, பல தரப்பட்ட செயல்முறைகளை பரிந்துரைப்பது அவசியமாகின்றது. இதன் காரணத்தினால் சாஸ்திரங்களின் எண்ணிக்கையும் எண்ணிலடங்காமல் உள்ளன. இத்தகு பல்வேறு சாஸ்திரங்களில், பல தரப்பட்ட முறைகளும் கடமைகளும் விதிக்கப்பட்டுள்ளன. இந்த யுகத்தில் இருக்கும் வீழ்ச்சியடைந்த ஆத்மாக்களால், வர்ணாஷ்ரமத்தை விளக்கும் இவ்வெல்லா சாஸ்திரங்களின் எல்லாப் பாடங்களையும் கற்றறிந்து அவற்றைப் பின்பற்றுவது என்பது சாத்தியமல்ல. எனவே, இவ்வெல்லா சாஸ்திரங்களின் சாரத்தை மட்டும் விவரிக்கும்படி, நைமிஷாரண்ய முனிவர்கள் ஸ்ரீ சூத கோஸ்வாமியைக் கேட்டுக் கொண்டனர்.

மனிதர்களை ஆன்மீகத் தளத்திற்கு உயர்த்துவதற்கு, வர்ணாஷ்ரம சமூகமே மிகச்சிறந்த ஸ்தாபனமாகக் கருதப்பட்டது. ஆனால் கலி யுகத்தின் காரணத்தால், இவ்வமைப்பின் சட்டதிட்டங்களை நிறைவேற்றுவது சாத்தியமல்ல. மேலும், வர்ணாஸ்ரம அமைப்பு கட்டளையிடுவதைப் போல், தங்கள் குடும்பங்களுடன் தங்களுக்கு உள்ள உறவுகளை முற்றிலுமாக துண்டித்துக் கொள்வது பொது மக்களுக்கு சாத்தியமானதல்ல. தற்போதைய சூழ்நிலை முழுவதும் எதிர்ப்புகள் நிறைந்ததாக உள்ளது. இதைக் கருத்திற் கொண்டு பார்த்தால், இந்த யுகத்திலுள்ள சாதாரண மனிதனுக்கு ஆன்மீக விடுதலை மிகவும் சிரமமானது என்பதை ஒருவர் அறிய முடியும். சாதுக்கள் இவ்விஷயத்தை ஸ்ரீ சூத கோஸ்வாமியிடம் கேட்டதற்குரிய காரணம் பின்வரும் ஸ்லோகங்களில் விளக்கப்பட்டுள்ளது.

(தொடரும்)

## கௌடீய வைஷ்ணவ நாள்காட்டி

### (அக்டோபர் 1 முதல் நவம்பர் 10 வரை)

### அக்டோபர்

04, திங்கள், இந்திர ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:03–10:03

17, ஞாயிறு, ஸ்ரீ விஜய தசமி, பகவான் ஸ்ரீ இராமர் போரில் வெற்றி கண்ட திருநாள்
ஸ்ரீபாத மத்வாசாரியர் தோன்றிய நாள்

19, செவ்வாய், பஸங்குச ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:04–10:01
ஸ்ரீல ரகுநாத தாஸ கோஸ்வாமி நினைவு நாள்
ஸ்ரீல ரகுநாத பட்ட கோஸ்வாமி நினைவு நாள்
ஸ்ரீல கிருஷ்ணதாஸ கவிராஜ் கோஸ்வாமி நினைவு நாள்

21, வியாழன், மூன்றாம் சாதுர்மாதத்தின் கடைசி நாள்

22, வெள்ளி, ஸ்ரீ முராரி குப்தர் நினைவு நாள்
நான்காம் சாதுர்மாத விரதம் ஆரம்பம் (ஒரு மாதத்திற்கு உளுந்து சாப்பிடக் கூடாது) கார்த்திக் (தாமோதர) மாதத்தின் முதல் நாள்

28, வியாழன், ஸ்ரீல நரோத்தம தாஸ தாகூர் நினைவு நாள்

31, ஞாயிறு, பஹுலாஷ்டமி, ராதா குண்டம் தோன்றிய நாள்

### நவம்பர்

2, செவ்வாய், இராம ஏகாதசி விரதம்
மறுநாள் விரதம் முடிப்பதற்கான நேரம் 06:07–10:01

6, சனி, தீபாவளி (தமிழக வழக்கத்தில் 5ஆம் தேதியே கொண்டாடப்படுகிறது)

7, ஞாயிறு, கோ பூஜை, கோவர்தன பூஜை
ஸ்ரீ ரஸிகானந்தர் தோன்றிய நாள்

9, செவ்வாய், ஸ்ரீல பிரபுபாதர் நினைவு நாள் (மதியம் வரை விரதம்)

(தமிழகத்தின் மையப் பகுதியான திருச்சியை அடிப்படையாக வைத்து கணக்கிடப்பட்டுள்ளது, ஏகாதசி விரதத்தை முடிப்பதற்கான நேரம் மற்ற இடங்களில் சற்று வேறுபடும்.)

# தமிழகத்திலுள்ள இஸ்கான் கோவில்களின் முகவரிகள்

**ஒசூர்**—இராமர் கோவில் வளாகம், நேதாஜி ரோடு, ஒசூர் - 635 019. தொலைபேசி: (04344) 226222. மின்னஞ்சல்: iskcon_hosur@rediffmail.com

**கும்பகோணம்**—56/49, சௌராஷ்டிரா பெரிய தெரு, கும்பகோணம் - 612 001. தொலைபேசி: 99949 49108. மின்னஞ்சல்: vanamali.gopal.jps@pamho.net

**கோயமுத்தூர்**—ஸ்ரீ ஜகன்னாதர் கோயில், ஹரே கிருஷ்ண நிலம், 100 அடி நியூ ஸ்கீம் ரோடு, CIT கல்லூரி எதிர்புறம், கோயமுத்தூர் - 641 014. தொலைபேசி: (0422) 2574508, 2574812, 2574813. மின்னஞ்சல்: bhakti.vinoda.swami@pamho.net. www.iskcon-coimbatore.org

**சென்னை**—ஹரே கிருஷ்ண நிலம், பக்திவேதாந்த ஸ்வாமி சாலை, கிழக்குக் கடற்கரைச் சாலை, சோழிங்கநல்லூர் அஞ்சல், அக்கரை, சென்னை - 600 041. தொலைபேசி: (044) 24530920/21/22/23, 24343266, 32911472 மின்னஞ்சல்: iskconchennai@pamho.net www.iskconchennai.com

அலுவலக முகவரி: புது எண் 23, முதல் மெயின் ரோடு, கே.பி, நகர், அடையார், சென்னை - 600 020. தொலைபேசி: (044) 24456199. மின்னஞ்சல்: iskconoffice@gmail.com

**சேலம்**—ஹரே கிருஷ்ண நிலம், கருப்பூர், சேலம் - 636 012. தொலைபேசி: (0427) 2001686, 2345545, 94421 53427. மின்னஞ்சல்: iskcon.salem@pamho.net www.iskconsalem.com

**திருநெல்வேலி**—10B, திருவனந்தபுரம் ரோடு, வண்ணாரப் பேட்டை ரவுண்டானா அருகில், திருநெல்வேலி - 627 002. தொலைபேசி: (0462) 2501640. மின்னஞ்சல்: iskcon.tirunelveli@pamho.net

**நாகர்கோயில்**—418, KP ரோடு, நாகர்கோயில் - 629 002. தொலைபேசி: 98946 00108. மின்னஞ்சல்: iskcon.kanyakumari@gmail.com

**மதுரை**—12/37. மணிநகரம் மெயின் ரோடு, மதுரை - 625 001. தொலைபேசி: (0452) 2346472. மின்னஞ்சல்: iskcon.madurai@pamho.net

**வேலூர்**—10/12, 10வது கிழக்குக் குறுக்குத் தெரு, காந்திநகர், வேலூர் - 632 006. தொலைபேசி: (0416) 2241654, 94429 53417. மின்னஞ்சல்: akincan_bvks97@rediffmail.com

**ஸ்ரீரங்கம், திருச்சி**—ஹரே கிருஷ்ண நிலம், 107, அம்மா மண்டபம் ரோடு, ஸ்ரீரங்கம், திருச்சி - 620 006. தொலைபேசி: 99442 05875. மின்னஞ்சல்: rukmiha.jps@pamho.net

---

**பாண்டிச்சேரி**—41, 8வது குறுக்குச் சாலை, முதல் தளம், ரெயின்போ நகர், பாண்டிச்சேரி - 605 011. தொலைபேசி: 94434 68923, 99408 64086. மின்னஞ்சல்: sarvananda2003@yahoo.com

## சிறிய (நாமஹட்டா) மையங்கள்

**தேன்கனிக்கோட்டை**—கிருஷ்ண பலராமர் ஆலயம், ஹரே கிருஷ்ண ரோடு, அன்செட்டி மெயின் ரோடு, தேன்கனிக்கோட்டை.

**நாமக்கல்**—இஸ்கான் நாமஹட்டா மையம், ஸ்ரீ செல்வம் பிளாசா மாடியில், நரசிம்மர் கோவில் எதிரில், கோட்டை, நாமக்கல் - 637 001. தொலைபேசி: 94421 53427, 97885 84802.

**பெரம்பூர், சென்னை**—7C, வாசன் தெரு, பெரம்பூர், சென்னை - 600 011. தொலைபேசி: 98400 87067. மின்னஞ்சல்: jai.gopinath.jps@pamho.net

**நெய்வேலி**—E53, அண்ணா சாலை, பிளாக்-26, நெய்வேலி - 607 803. தொலைபேசி: 98945 30533.

**தர்மபுரி**—180, பை-பாஸ் ரோடு, அரசு மருத்துவமனை அருகில், சேலம் மெயின் ரோடு, தர்மபுரி. தொலைபேசி: 97886 16028.

இவை தவிர மேலும் பல்வேறு இடங்களில் சிறிய அளவில் நிகழ்ச்சிகள் நடைபெறுகின்றன. மேலும் விவரங்களுக்கு தங்களுக்கு அருகிலுள்ள முக்கிய மையங்களைத் தொடர்பு கொள்ளவும்.

இந்தியாவின் இதர இடங்களில் உள்ள மையங்களின் முகவரியையும் உலகளாவிய மையங்களின் முகவரியையும் அறிய, தங்களுக்கு அருகிலுள்ள இஸ்கான் மையங்களை அணுகவும். அல்லது www.krsna.com என்ற இணைய தளத்தில் காணவும்.


































# ஸ்ரீ கிருஷ்ண ஜென்மாஷ்டமி கொண்டாட்டங்கள்




தங்கமயில்

தங்கம் + வைரம் + வெள்ளி + பிளாட்டினம்

தங்கம் வாங்க, தங்கமயிலுக்கு வாங்க

124, நேதாஜி ரோடு, மதுரை. போன்: 0452 2345553

இராஜபாளையம்
813, தென்காசி ரோடு, இராஜபாளையம்.
போன்: 04563 225553

காரைக்குடி
333, செக்காலை ரோடு, காரைக்குடி.
போன்: 04565 400553

இராமநாதபுரம்
262, சாலைத்தெரு, இராமநாதபுரம்.
போன்: 04567 225553

திண்டுக்கல்
1, சாலை ரோடு, திண்டுக்கல்.
போன்: 0451 2440553

தேனி
1244, பெரியகுளம் ரோடு, தேனி.
போன்: 04546 255553

சிவகாசி
144A, N.R.K.R. ரோடு, சிவகாசி.
போன்: 04562 278553

தூத்துக்குடி
161, WGC. ரோடு, தூத்துக்குடி
போன்: 0461 2337553